# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## கர்த்தாவே, எங்களை உயிர்ப்பியும்

TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

September - October 2018
Volume : 58

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 5

## தங்க தலைவர்கள் ஆடிட்டோரியம் திறப்பு மற்றும் 70வது ஆண்டு கொண்டாட்டம்

























ஆசிரியரிடமிருந்து........!

# கர்த்தாவே, உயிர்ப்பியும்

### சங்கீதம் 119:25

எழுப்புதல் நாயகனாம் இயேசுவின் நாமத்தில் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

ஆண்டவராகிய இயேசுவின் வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. அவருடைய வருகைக்கு முன் தேவன் ஒரு பெரிய ஆவிக்குரிய எழுப்புதலை தேசங்களில், பட்டணங்களில், சபைகளில் கட்டளையிட வாஞ்சையாயிருக்கிறார். கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என்னுடைய ஆவியை ஊற்றுவேன் என்று வாக்குப்பண்ணினவர் இந்த கடைசி நாட்களில் உலகெங்கும் பின்மாரி மழையை ஊற்றிக்கொண்டிருக்கிறார். உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கில் ஒரு உயிர்மீட்சியை கொண்டு வந்து மகா திரளான சேனையாக நிற்கச் செய்த தேவன், நம்மையும் உயிரடையச் செய்து அவருக்காக எழும்பிப் பிரகாசிக்கச் செய்ய ஆவலாயிருக்கிறார்.

## எழுப்புதல் என்றால் என்ன? - WHAT?

எழுப்புதல் என்பது ஆவிக்குரிய வாழ்வில் உள்ள பின்மாற்றங்கள், மந்த நிலைமைகள், நிர்விசாரங்கள் மற்றும் செத்த நிலைகள் மாறி ஆவிக்குரிய உயிர்மீட்சி பெறுவது. ஆதி அன்புக்குத் திரும்புவது, பாவ உணர்வடைந்து தேவன் விரும்பும் பரிசுத்த வாழ்விற்கு திரும்புவது, தேவனுக்காக எழுந்து சுறுசுறுப்பாக செயல்படுவது ஆகும். டெல் பௌசன்பெல்ட் என்ற தேவ மனிதன், ‘எழுப்புதல், தேவ பிரசன்னத்தின் மீது தாகத்தையும், தேவன் மேல் அளவற்ற அன்பையும், பாவத்தின் மேல் வெறுப்பையும், வசனத்தின் மேல் வாஞ்சையையும் உண்டாக்குகிறது’ என்று கூறுகிறார். ‘எழுப்புதலின் போது, தேவனுடைய மகிமை, வல்லமை, ஆசீர்வாதங்கள் தேவ ஜனங்கள் மேல் ஊற்றப்படுகிறது’ என்று ஸ்டீபன் ஆல்போர்ட் என்ற போதகர் கூறுகிறார். ‘எழுப்புதலின் போது, ஜனங்கள் பாவ உணர்வடைந்து, மனந்திரும்பி, தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழ ஒரு தீவிர வாஞ்சையும், விருப்பமும் பெறுகிறார்கள்’ என்று எழுப்புதல் வீரர் சார்லஸ் பின்னி கூறுகிறார். ஆகவே எழுப்புதல் தான் இன்றைய முக்கிய தேவை! எழுப்புதலால் தான் சபை பரிசுத்தமடையும். எழுப்புதல் மூலம்தான் ஜனங்களை தீவிரமாகவும் துரிதமாகவும் கிறிஸ்துவுக்குள் வழிநடத்த முடியும்.

## எழுப்புதல் எப்பொழுது தேவை?- WHEN?

தேவ ஜனங்கள் அனலுமின்றி, குளிருமின்றி நிர்விசாரமாக வாழ்ந்து கொண்டிருக்கும்போது எழுப்புதல் நிச்சயம் தேவை (வெளி.3: 15-17). சுகவீனமாக இருக்கும் ஒரு நபரின் சரீரத்தில் சில அறிகுறிகள் காணப்படுவது போல ஆவிக்குரிய எழுப்புதல் தேவைப்படும் விசுவாசியின் வாழ்விலும் கீழ்க்கண்ட அடையாளங்கள் காணப்படும்.

- ஆதியிலிருந்த அன்பு குறைந்திருக்குமாயின் எழுப்புதல் தேவை.
- பாவத்தின் மீது வெறுப்பு இல்லாதிருந்தால் எழுப்புதல் தேவை.
- சபை காரியங்களில் ஈடுபாடு குறைவாக இருப்பின் எழுப்புதல் தேவை.
- கிறிஸ்தவ வாழ்வில் மகிழ்ச்சி இல்லாதிருக்குமாயின் எழுப்புதல் தேவை.
- மன்னியாமை, பொறாமை, கசப்பு, விரோதம், புறங்கூறுதல், பெருமை ஆகிய இவைகள் நம்மில் காணப்பட்டால் எழுப்புதல் தேவை.
- அதிக நேரம் டி.வி. பார்ப்பது, அதிக நேரம் தூங்குவது, அதிக நேரம் செல்போனில் செலவழிப்பது போன்ற காரியங்கள் நம்மில் காணப்படுமாயின் எழுப்புதல் தேவை.
- நித்தியத்தைக் குறித்து சிந்திக்காமல், உலகத்துக்கடுத்தவைகளையே சிந்தித்து கொண்டிருப்போமானால் நமக்கு எழுப்புதல் தேவை.
- ஜெபமும், வேத வாசிப்பும் இல்லாமலும் அல்லது மிகக் குறைவாகவும் இருக்குமாயின் எழுப்புதல் தேவை.
- அழிந்துபோய் கொண்டிருக்கும் ஆத்துமாக்கள் மேல் எவ்வளவேனும் கரிசனை இல்லாமல் வாழ்ந்து கொண்டிருப்போமானால் நமக்கு நிச்சயம் எழுப்புதல் தேவை.

## எழுப்புதலை எப்படி அனுபவிக்க முடியும்?- HOW?

தேவன் மட்டுமே எழுப்புதலை தர முடியும். அவர்தான் எழுப்புதலின் காரணர். ஆகவேதான் சங்கீதக்காரன், 'எங்களை உயிர்ப்பிக்கமாட்டீரோ'? என்று தேவனை நோக்கி கதறுகிறான் (சங்.85:6). எழுப்புதலை நாமும் நமது சபைகளும் காண, வேதத்தில் பரிசுத்தவான்கள் ஏறெடுத்த கீழ்கண்ட சில ஜெபங்களை நாமும் ஏறெடுக்க வேண்டியது அவசியம்.

### 'என்னை உயிர்ப்பியும்': Revive Me

ஒவ்வொரு விசுவாசியும் முதலாவது **'என்னை உயிர்ப்பியும்'** என்று ஜெபிக்க வேண்டும். சங்கீதக்காரன் 119ம் சங்கீதம் 25, 37, 40, 88, 107, 149, 154, 156, 159 ஆகிய 9 வசனங்களில் 'கர்த்தாவே, என்னை உயிர்ப்பியும்' என்று மன்றாடுகிறான். எழுப்புதல் முதலாவது ஒரு தனி மனிதனில் ஆரம்பமாகிறது. ஆகவே உங்களை தாழ்த்தி, தேவன், உங்கள் இருதயத்தைச் சோதித்து, உங்கள் பாவங்களை உங்களுக்கு வெளிப்படுத்தும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் (சங்.139:23,24). தேவன் உணர்த்தும் அனைத்து பாவங்களிலிருந்தும் முழுமையாக மனந்திரும்புங்கள். மறைவான குற்றங்களை அறிக்கை செய்து விட்டுவிடுங்கள் (சங்.19:12; நீதி.28:13). பாவத்தை நம்மைவிட்டு நீக்காமல் நாம் எழுப்புதலுக்காக ஜெபித்துக்கொண்டே இருக்கலாம். ஆனால் எழுப்புதலோ ஒருபோதும் வராது. உங்கள் அக்கிரமங்கள் தேவனுக்கும் உங்களுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது (ஏசாயா 59:2). பாவம் கண்டிப்பாக அறிக்கை செய்யப்படவும், நீக்கப்படவும் வேண்டும். தேவனுக்கு விரோதமாக செய்த பாவத்தை தேவனிடமும், பிறருக்கு விரோதமாக செய்த பாவத்தை அந்த நபரிடமும் போய் அறிக்கையிட்டு ஒப்புரவாக வேண்டும். அப்பொழுது தான் உண்மையான எழுப்புதலைக் காண முடியும் (1யோவான் 1:9; மத்தேயு 5:23,24).

இப்படி உங்களை மிகவும் தாழ்த்தி, மனங்கசந்து அழுது ஜெபிக்க ஒப்புக்கொடுப்பீர்களானால், எழுப்புதல் அக்கினி உங்களில் வந்து இறங்கும். பரிசுத்த

ஆவியின் வல்லமை உங்களில் ஊற்றப்படும். உங்களிலுள்ள செத்த கிரியைகள் அகன்றுபோகும் (எபி.9:14; எசே.37:5,6). பாவத்தின் மீது வெறுப்பு உண்டாகும். உலகத்தின் மீதுள்ள பற்று அகன்று போகும். தேவ அன்பு பரிசுத்த ஆவியின் மூலம் உங்கள் இருதயங்களில் ஊற்றப்படும் (ரோமர் 5:5). அப்பொழுது தேவப் பிரசன்னத்தின் மீதும் தேவனுடைய வார்த்தையின் மீதும் அளவற்ற தாகமும் வாஞ்சையும் உண்டாகும் (சங். 84:10; 119:97). அழிந்துபோகும் ஆத்துமாக்களுக்கு நற்செய்தி அறிவிக்க பாரமும் உந்துதலும் ஏற்படும் (2கொரி.5:14). உங்களில் உண்டாகும் இந்த எழுப்புதல் உங்கள் குடும்பம், உங்கள் சபை, உங்கள் ஊர் என பரவி பற்றிப்பிடிக்கும்! ஆமென். அல்லேலூயா!

### 'எங்களை உயிர்ப்பியும்' : Revive Us

தனிநபர் எழுப்புதல் மட்டுமல்லாது, சபையாகவும், தேவ ஜனங்கள் கூடி **'கர்த்தாவே, எங்களை உயிர்ப்பியும்'** (சங். 80:18;85:6) என்று ஜெபிக்க வேண்டும். 'என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி ஜெபம்பண்ணி, என்முகத்தை தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பினால்... அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்' என்று கர்த்தர் சொல்லுகிறார் (2நாளா.7:14). தேவ ஜனங்கள் உபவாசத்தோடும் அழுகையோடும் முழு இருதயத்தோடும் தேவனிடத்திற்கு திரும்ப வேண்டும். அப்பொழுது கர்த்தர் தமது ஜனத்திற்காக வைராக்கியங்கொண்டு, அவர்களை கடாட்சித்து, அவர்களுக்கு பெரிய காரியங்களைச் செய்வார் (யோவேல் 2:12-21). திருச்சபை, இழந்து போன வல்லமை, வரங்கள், ஆதி அன்பு, பரிசுத்தம், ஊழிய வாஞ்சை, தரிசனம் ஆகியவற்றை மறுபடியும் பெற்று, ஆதி நிலை ஏகி அவருக்காக எழும்பிப் பிரகாசிக்க தேவன் கிருபை செய்வார் (யோவேல் 2:25-32; சங்.80:3, 7, 19).

### 'உம்முடைய கிரியையை உயிர்ப்பியும்' : Revive Your Work

ஆபகூக் தீர்க்கதரிசி, **"கர்த்தாவே, உம்முடைய கிரியையை உயிர்ப்பியும்"** என்று விண்ணப்பஞ்செய்கிறான் (ஆபகூக் 3:2). இது நம்முடைய ஜெபமாகவும் மாற வேண்டும். வேதாகமக் காலங்களிலும், சபை சரித்திரத்திலும் கர்த்தருடைய பலத்த கரத்தின் கிரியைகளை நாம் காண முடியும். வேதாகமத்தில் பல்வேறு காலக் கட்டத்தில் ஏற்பட்ட எழுப்புதல்களை இந்த இதழின் 9,10 பக்கங்களில் நீங்கள் காணலாம். மேலும் சபை சரித்திரத்தில் பல்வேறு தேவ மனிதர்கள் மூலம் சமுதாயத்திலும், பட்டணங்கள், தேசங்களிலும் தேவன் எழுப்புதலை கட்டளையிட்டார். அப்பொழுது ஜனங்கள் திரளாய் இரட்சிக்கப்பட்டார்கள், பலத்த அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெற்றன. திரையரங்கங்கள், மதுபான கடைகள், கேளிக்கை அரங்குகள் மூடப்பட்டன. விக்கிரக ஆராதனைகள் இல்லாமல் போயிற்று. சபைகள் ஆத்துமாக்களால் நிரம்பி வழிந்தன. அப்படிப்பட்ட மேன்மையான கிரியைகளை இந்த கடைசி நாட்களில் நம்முடைய பட்டணத்திலும் தேசத்திலும் தேவன் நடப்பிக்க அவரை நோக்கி மன்றாடுவோம்! ஜெபமே எழுப்புதலுக்கான திறவுகோல்! ஜெபிப்போம்! எழுப்புதலை விரைவில் காண்போம்!

**தேவனே! எழுப்புதலை அனுப்பும்!**

**Rev.Dr. ஜெரி டேனியல்,**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்),
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி.



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்


## Rev. P.S. ராஜமணி

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020


'ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்' என்ற இத்தலைப்பின் கீழ் இன்றைய சபைகள் எழுப்புதலடைவதற்காக செயல்பட வேண்டிய பல ஆலோசனைகளை தொடர்ந்து எழுத விரும்புகிறேன்.

## ஆதி சபை ஜெபிக்கிற சபையாயிருந்தது

### இயேசு கிறிஸ்துவின் ஜெபம்

திருச்சபையின் தலைவராகிய நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜெப வீரராக இருந்தார். அவருடைய ஜெப வாழ்க்கையை சீஷர்கள் கூர்ந்து கவனித்தனர்.

அவர் அதிகாலையில். இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம் பண்ணினார் (மாற்கு 1:35).

அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார் (லூக்கா 6:12).

பின்பு அவர் புறப்பட்டு, வழக்கத்தின்படியே ஒலிவ மலைக்குப் போனார், அவருடைய சீஷரும் அவரோடே கூடப்போனார்கள்.அவ்விடத்தில் சேர்ந்தபொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லி, அவர்களை விட்டு, கல்லெறி தூரம் அப்புறம் போய், முழங்கால்படியிட்டு, பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார் (லூக்கா 22:39–42).

அவருடைய ஜெப வாழ்க்கையைக் கண்ட அவர்கள் தாங்களும் அவ்விதமாக ஜெபிக்கக் கற்றுத்தரும்படி கேட்டனர். இயேசு ஜெபித்தபோது வானம் திறக்கப்பட்டது (லூக்கா 3:21). அவர்கள் ஜெபித்தபோது, அவருடைய முகமும், ஆடையும் பிரகாசித்தது (லூக்கா 9:29).

### ஆதிசபையாரின் ஜெபம்

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பரமேறிப் போன பின்பு அப்போஸ்தலர்களும் மற்ற சீடர்களும், சகோதரிகளும் எருசலேமில் கூடி ஜெபித்தனர். ஆதிச்சபை ஜெபக் கூட்டத்தில் தான் ஆரம்பமாயிற்று. ஜெபத்தின் அவசியத்தை உணர்ந்து ஜெபித்தனர். திட்டமான நோக்கங்களோடு ஜெபித்தனர். தேவனுடைய வல்லமையில்லாமல், தேவனுடைய வழிநடத்துதல் இல்லாமல் ஒன்றும் சாதிக்க முடியாது என்பதை நன்கு அறிந்து உணர்ந்து ஜெபித்தனர். ஜெபித்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றனர்.

அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும், இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு. ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 1:14).

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:1).

ஏனோ தானோவென்று கடமைக்காக ஜெபம் பண்ணாமல் ஊக்கமாய்

உறுதியாய் ஜெபித்தனர். இப்படிப்பட்ட ஜெபத்தால் சபையில் வளர்ச்சி உண்டானது.

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:42).

தேவன் வல்லமையாய் பயன்படுத்திய பேதுருவும், யோவானும் பல்லாயிரம் மக்களுக்கு போதகர்களாக இருந்த போதிலும் ஜெப நேரத்தில் ஜெபிக்க தவறவில்லை.

ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே பேதுருவும், யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள் (அப்போஸ்தலர் 3:1).

அற்புத அடையாளங்கள் நடக்கவும் அப்போஸ்தலர் வசனத்தை தைரியமாய் பிரசங்கிக்கவும் ஜெபித்தனர். உயிரற்ற ஜெபம் செய்யவில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு ஜெபித்தபோது அவர்கள் கூடியிருந்த இடத்தில் தேவ வல்லமை வெளிப்பட்டது. அந்த இடம் அசைந்தது.

அவர்கள் ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள் (அப்போஸ்தலர் 4:31).

பேதுரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கையில் சபையார் அவருடைய விடுதலைக்காக ஜெபித்தனர். அவர்கள் ஜெபத்தின் பலனாக பேதுரு தேவதூதனுடைய உதவியினால் சிறைச்சாலையிலிருந்து தப்பி வெளியே வந்தார்.

அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான். அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது. தூதன் அவனை நோக்கி: உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்றான் (அப்போஸ்தலர் 12:5,7,8). அவன் இப்படி நிச்சயித்துக் கொண்டு, மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான். அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள் (அப்போஸ்தலர் 12:12).

அந்தியோகியா சபையார் உபவாசித்து ஜெபித்தபோது வெளிநாடுகளுக்கு மிஷனரிகளை அனுப்ப பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டனர்.

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது, பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள் (அப்போஸ்தலர் 13:2,3).

ஆதி சபையார் கர்த்தரை எவ்வளவு சார்ந்து இருந்தார்கள் என்பதை அவர்களுடைய ஜெப வாழ்க்கை நன்கு நமக்கு வெளிப்படுத்துகிறது.

## இன்றைய சபைக்கு அறைகூவல்

இன்றும் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற சபைகள் பல உள்ளன. இப்படிப்பட்ட சபைகள் 100க்கு ஒன்று அல்லது இரண்டு இருக்கலாம். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நம்பாத சபைகளில் ஜெபம் வெறும் நிகழ்ச்சியாகவே நடைபெறுகிறது. கருத்துடன் ஜெபிக்கின்ற பலர் இருந்தாலும், பொதுவாக சிலர் ஜெபக்குறிப்புகளை வாசித்து முடித்து விடுகின்றனர். ஆவிக்குரிய சபைகள் என்று அழைக்கப்படும் சபைகளில் ஓரளவு ஜெபம் நடந்தாலும் ஊக்கமாக ஜெபிக்கின்றவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் உள்ளனர்.

ஜெபக்கூட்டத்திற்கு வருகின்றவர்களுடைய எண்ணிக்கை வெகு குறைவாகவே இருக்கின்றது என்பது அகில உலக அளவிலும் எல்லா நிலையிலுள்ள சபைகளிலும் உண்மை என்பது எல்லாரும் அறிந்ததே.

அமெரிக்காவில் ஞாயிறு காலையில் சுமார் 1200 பேர் கூடும் சபையில் நடந்த வெள்ளிக்கிழமை இரவு ஜெபக்கூட்டத்திற்கு போயிருந்தேன். 4 பாட்டிகள் வந்திருந்தார்கள். நானும் சபைப் போதகரும் சேர்ந்து மொத்தம் 6 பேர். ஜெபத்தின் மேன்மை தெரியாதவர்களல்ல இவர்கள். ஜெபம் பண்ண விரும்புகிறேன். ஆனால் நேரமில்லை. என்னுடைய வேலையினிமித்தம் நான் ஜெபம் பண்ண விரும்புகிற அளவு ஜெபிக்க முடியவில்லை என்று வேதனைப்படும் விசுவாசிகளும், போதகர்களும் ஏராளமுண்டு.

ஜெபத்தின் அவசியத்தை ஆழமாய் உணராததால் வரும் ஆபத்து இது. சாத்தான் தேவ பிள்ளைகளுக்கு விரோதமாக செயல்படும் காரியங்களில் இது நம்பர் ஒன்.

தேவ சமூகத்தில் அமர்ந்து ஊக்கமாய் ஜெபிக்க ஆரம்பித்துவிட்டால் தேவன் வல்லமையாய் பயன்படுத்தும் போதகராய் மாறிவிடுவர் என்று பிசாசுக்கு நன்கு தெரியும். ஜெபமின்மையால் தோல்வியை சந்திக்கும் சபையால் தனக்கு வெற்றி நிச்சயம் என்று சாத்தான் திட்டமாய் அறிந்திருக்கிறான். நான் எழுதும் இந்த உண்மை எல்லா விசுவாசிகளுக்கும் தெரியும். எல்லாப் போதகர்களுக்கும் தெரியும். ஆனாலும் அவர்களுடைய ஜெப வாழ்க்கை மிகவும் பெலவீனமாகவே இருக்கிறது. இந்த விஷயத்தில் குற்றமனச்சாட்சியுடனேயே அநேகர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எல்லாரும் ஜெபிக்கத்தான் செய்கின்றார்கள். காலையில் எழுந்தவுடன் ஜெபிக்கிறோம், இரவில் படுக்கப்போகுமுன் ஜெபிக்கிறோம். ஆனால் இந்த ஜெபங்களை உற்றுக் கவனித்தால் உயிரற்ற, உணர்வற்ற, சடங்காச்சாரமான ஜெபமாகவே இருப்பது தெரியும். வழக்கமாய் ஜெபிக்கிற பாரம்பரிய ஜெபத்தால் எந்த பலனும் கிடைக்காது.

ஜெபத்தைக் குறித்து பிரசங்கிக்கலாம். புத்தகங்கள் எழுதலாம். இதுபோன்ற செய்திகளை எழுதலாம். ஆனாலும் இவை ஊக்கமாய் ஜெபிக்கும் ஜெபத்திற்கு இணையாகாது.

நமது ஜெபத்தால் என்ன சாதிக்கின்றோம் என்று பார்த்தால் விபரம் தெரியும். பல வருடமாக ஜெபித்து வருகின்ற ஒருவர், தான் ஜெபத்தால் என்ன சாதித்துள்ளார் என்று தன்னைத் தானே கேட்டுப் பார்க்கட்டும்.

தேவனோடு உறவாடும் ஜெபத்தினால் ஒருவருடைய மனநிலை, சுபாவம், ஆவிக்குரிய வாழ்வு நிச்சயம் மாற்றமடையும், முன்னேற்றம் ஏற்படும். போதகருடைய ஊழியத்தில் முன்னேற்றம் உண்டாகும். பிரசங்கிக்கும்போது வல்லமை புறப்படும்.

- தொடரும்.

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்



# உயிர்மீட்சியே நமது தேவை

பாகம் : 2

**Rev. Dr. L. ஜெயபாலன்**

கொடைக்கானல்

கடந்த இதழில் உயிர்மீட்சியை, தேவன் ஒரு நபரிடம் உண்டாக்குகிறார். பரிசுத்தாவியானவர், வேத வசனம் இவைகள் மூலம் ஏற்படுத்துகிறார் என்பவைகள் இடம் பெற்றன. உயிர்மீட்சியை, தேவன் தமது கிருபையின் மூலம், கட்டளைகள், கடவுளின் வார்த்தை, அவருடைய நீதி, அவருடைய ஆவி மூலம் ஏற்படுத்துகிறார் என்பவைகள் இதழில் வெளிவந்தன. உயிர்மீட்சி ஏற்பட்டால் எவைகள் ஒருவர் வாழ்வில் உண்டாகும் என்பதை இந்த இதழில் அறிவோமாக!

## மகிழ்ச்சி (Joy)

இரட்சிக்கப்பட்டும், பலவித தாக்கங்களால், பாரம் அடைந்த இதயம் உயிர்ப்பிக்கப்படுகிறது. “உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி, நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ?” (சங்.85:6). ஒருவரில் ஏற்படும் மகிழ்ச்சி, பிறரிடமும் பரவும். பின்மாற்றத்தில் இருப்பவர் உயிர்ப்பிக்கப்படும் பொழுது அவருக்குள் “இரட்சண்யத்தின் சந்தோஷம்” மறுபடியும் காணப்படும். “உற்சாகமான ஆவி அவரைத் தாங்கும்.”

## ஆராதனை (Worship)

தொடர்ந்தேர்ச்சியாக ஆராதிக்கும் கிருபை காணப்படும். ஆராதனையில் ஒரு தெம்பு காணப்படும். “எங்களை உயிர்ப்பியும். அப்பொழுது உமது நாமத்தைத் தொழுது கொள்ளுவோம்” (சங்.80:18). கடவுள் ஆராதனையை விரும்புகிறார். “மனிதனுடைய இறுதி நிலை என்ன? அவருக்குள் காணப்படவும். அவரை மகிமைப்படுத்துவதுமே” என்று இங்கிலாந்திலுள்ள ஆலயத்தில் அறிக்கையாகக் காணப்பட்டது.

## ஜெப வாழ்க்கை (Closer Walk)

இயேசுயுடன் ஒரு நெருங்கிய வாழ்க்கை. பிரார்த்தனை என்பது ஏதோ கடமைக்காக இராமல், பரமப்பிதாவுடன் ஒரு அனுதின தொடர்பை ஏற்படுத்துவதாகும். “வழக்கம் போல் ஓரிடத்திற்கு சென்று ஜெபிக்கிற அனுபவம் உண்டாகும். வீட்டிலேயே ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஜெபித்தல் போன்றவை காணப்படும்” அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள் (அப்.4:13). “நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும்” அப்.6:4 என்ற அப்போஸ்தலர்களின் அனுபவம் காணப்படும். ஆரம்பத்தில் ஜெபத்திற்கு முன்னுரிமை கொடுத்தவர்கள், காலப்போக்கில், தலைமைத்துவத்தில் உயரும்பொழுது, ‘‘எனக்கு ஜெபம் பண்ணவே நேரம் இல்லை’’ என்ற சாக்குப்போக்கு மாறும்.

## வேத வசனத்தில் வாஞ்சை (Desire for God's word)

கர்த்தருடைய வார்த்தையை வாசிப்பதில் ஒரு பெரிய வாஞ்சை ஏற்படும். கர்த்தரையும் அவருடைய வார்த்தையையும் பிரிக்க முடியாது. மனிதன்

சொல்லுவான் செய்ய மாட்டான். செய்வான் சொல்லமாட்டான். தேவனோ எதைச் சொன்னாரோ அதையே செய்வார். எதைச் செய்வாரோ அதையே சொல்லுவார். "நீர் என்னை நம்பப் பண்ணின வசனத்தை உமது அடியேனுக்காக நினைத்தருளும். அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது" (சங்.119:49-50). கிறிஸ்தவர்களுக்கு பல அலுவல்களைச் செய்ய நேரம் இருக்கும். ஆனால் வேதம் வாசிக்கவோ நேரம் இல்லை என்பார்கள். உலகத்தில் உயிர்மீட்சி அடைந்து தலைவர்களாக இருப்பவர்கள் தேவனுடைய வசனத்தை அதிகமாக வாசித்தவர்களே! ஒரு சகோதரர், பைபிளை வாசிக்கத் தவறினால், லீவு எடுத்து ஒரு இடத்தில் தங்கி நாள் முழுவதும் வாசிப்பாராம். ஒரு செய்தியை ஆயத்தம் செய்ய ஊழியர் ஒருவர் குறிப்பிட்ட அதிகாரத்தை 12 தடவைகள் வாசிப்பாராம்.

## ஒப்புரவாகுதல் (Reconciliation)

ஒப்புரவாகுதல் என்பது பரிசுத்தாவியானவரின் செயல், குடும்பத்தில், உறவினரிடத்தில், பகைவர்களிடம் ஒப்புரவாகுதல் எழுப்புதலின் அடையாளம். மனவியாதியிலிருந்து, இரத்த அழுத்தம், நெருக்கம் போன்றவைகளிலிருந்து விடுதலை கொடுக்க "தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்' என்றான் தகப்பனை சந்தித்த கெட்டக்குமாரன் (லூக்கா 15:20-21). ஒரு தாய் எனது ஊழியத்தில் அபிஷேகம் பெற்றார்கள். வீட்டிற்குச் சென்றவுடன், தனது மாமியார் முன் முழங்காலில் அமர்ந்து அவர்களை கட்டிப்பிடித்தார்களாம். இரண்டு பேர்களும், எலியும், பூனையைப் போல் வாழ்ந்து வந்தார்களாம். இதனால் தூக்கம் இல்லாமல் தூக்க மாத்திரையை சாப்பிட்டு வந்தார்களாம். ஒப்புரவான பின்னர் "நன்றாக தூங்குகிறேன். தூக்க மாத்திரை எடுப்பதில்லை" என கூறினார்கள். தேவனுக்கே மகிமை!.

## பரிகாரம் செய்தல் (Restitution)

இப்படிப்பட்ட செய்கை, மனமாறுகையில், அபிஷேகம் பெறுகையில், எழுப்புதல் ஏற்படும்பொழுது, புதுபிக்கப்படுகையில் ஏற்படுகின்றது. "நான் ஒருவனிடத்தில் எதையாகிலும், அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்ப செலுத்துகிறேன் என்றான்" (லூக்கா 19:8). இது சகேயுவின் வாழ்க்கையில் இயேசு அவன் வீட்டிற்குச் சென்றபொழுது ஏற்பட்டது. ஒரு அம்மாள் எனது சாட்சியை கேட்டு, அவர்கள் எடுத்து வைத்திருந்த ஒரு பாத்திரத்தை (Eversilver) திரும்ப கொடுத்துவிட்டாள். உடனே அவர்கள் ஆஸ்துமா வியாதியும் அவர்களை விட்டு நீக்கினதென சாட்சி பகர்ந்தார்கள்.

## ஆத்தும ஆதாயம் (Evangelism)

இயேசுவின் அன்பை ஒவ்வொருவருக்கும் அறிவிக்க வேண்டுமென்ற அவா ஏற்படும். பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றதே சரீரத்திலும், ஆவியிலும், பெலனடைந்து ஒவ்வொருவருக்கும் நற்செய்தியை அறிவிப்பதற்கே ஆகும் (அப்.1:8). இன்றைக்கு 85% பேர் தனிப்பட்டவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தல் மூலம், இரட்சிக்கப்படுகின்றனர். தற்கொலைக்கு எத்தனித்தவர்கள், நிம்மதி பெற்று இன்று கடவுளுக்காக வாழ்கின்றனர். பிற மதத்தினரை குறைசொல்வது ஆத்தும ஆதாயம் அல்ல. இயேசுவின் அன்பை ஞானமாக சொல்வதே நற்செய்தி ஊழியமாகும். "ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகிறவன் ஞானமுள்ளவன்" (நீதி.11:30).

பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற 94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

# வேதாகமத்தில் காணப்படும் எழுப்புதல்கள்

வேதாகமத்தில் காணப்பட்ட சில எழுப்புதல்களை இங்கு சுருக்கமாக காண்போம்.

1. **சாமுவேல்** - இவர் தேசத்திற்கு அறிவுரை கூறி, அந்நிய தேவர்களை அகற்றி. மெய்யான ஒரே உண்மை தேவனை வழிபட, ஜனங்களை ஆயத்தப்படுத்தினபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 சாமு. 7:36).
2. **தாவீது**-முதன் முதலாக உடன்படிக்கைப் பெட்டியானது, எருசலேமுக்குள் கொண்டு வரப்பட்டபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 நாளா.15:25-28; 16:1-43; 29:10-25).
3. **சாலமோன்** - தேவாலயத்தை கட்டிமுடித்து அதை பிரதிஷ்டை செய்தபோது (2 நாளா. 7:1-3).
4. **ஆசா** - விக்கிரகங்களையும், சோதோமியரையும் தேசத்தைவிட்டு அகற்றி, ஜனங்களை கர்த்தரைத் தேட வைத்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 இராஜா 15:11-15).
5. **யோசபாத்** - தேவாலயத்தைச் சுத்திகரித்து மற்றும் லேவிய ஆசாரியத்துவத்தை பரிசுத்தம் செய்ததினால், எழுப்புதலுக்கு காரணமானார் (2நாளா 19).
6. **எலியா** - கர்மேல் மலைமீது பாகாலின் தீர்க்கதரிசிகளை முறியடித்து வானத்திலிருந்து அக்கினியை ஜெபத்தால் வரவைத்தபோது ஜனங்கள் கர்த்தரே தெய்வம் என்று ஆர்ப்பரித்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 இராஜா 18:21-40).
7. **யெகூ** - பாகால் வணக்கம் மற்றும் அவர்களது விக்கிரக தோப்பு, ஆலயங்கள் போன்றவற்றை முற்றிலும் அழித்துத் தீர்த்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (2இராஜா.10:17-20)
8. **யோய்தா** - பிரதான ஆசாரியராகிய இவர் விக்கிரகங்களை விட்டு திரும்பும்படி ஜனங்களை உடன்படிக்கை செய்யும்படி செய்து தேவனை ஆராதிக்க செய்தது மூலம் ஏற்பட்ட எழுப்புதல் (2 இராஜா 11:17-20).
9. **எசேக்கியா** - தேவாலயத்தை சுத்திகரித்து பஸ்கா பண்டிகையை மீண்டும் ஏற்படுத்தியபோது ஏற்பட்ட எழுப்புதல் (2 நாளா. 29:31).
10. **யோசியா** - தேவாலயத்தை சுத்தகரித்தபோது, நியாயப்பிரமாணப் புத்தகம் கண்டுபிடிக்கப்பட்டு, அதை இராஜாவுக்கும் மற்றும் பொது ஜனங்கள் முன்னிலையில் வாசித்தபோது, அதன் விளைவாக ஏற்பட்ட எழுப்புதல் (2 இராஜா. 22-23).
11. **எஸ்றா** - இஸ்ரவேலர் புறஜாதிய பெண்களை விவாகஞ்செய்தபடியால், அவர்களை விட்டு வேறுபிரிய எஸ்றா பிரசங்கித்ததன் விளைவாக ஏற்பட்ட எழுப்புதல் (எஸ்றா 9-10).
12. **நெகேமியா** - எருசலேமின் மதில்களைக் கட்டிமுடித்த பின்னர், எஸ்றா ஜனங்கள் அனைவரின் முன்னிலையில் தேவ வசனத்தை வாசித்து போதனை செய்தபோது, பெரிய எழுப்புதல் உண்டானது (நெகேமியா 13).
13. **யோனா** - இவர் எதிர்மறையான எண்ணமுடையவராயிருந்தும், இவரது பிரசங்கமானது, பெரியதான மனமாற்றத்தை ஏற்படுத்தி நினிவே பட்டணத்தில்

வாழ்ந்து வந்த அசீரியர்கள் நடுவே பெரிய எழுப்புதலை உண்டாக்கிற்று (யோனா 3).

**14. எஸ்தர் –** ஆமான் தன் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டு, யூதர் மனந்திரும்பி பூரீம் பண்டிகை கொண்டாடியபோது ஏற்பட்ட எழுப்புதல் (எஸ்தர் 9:17-22).

**15. யோவான் ஸ்நானன் –** மேசியாவின் வருகையைக் குறித்து பிரசங்கித்து, ஜனங்களை மனந்திருந்துமாறு பிரசங்கித்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (லூக்கா 3:2-18)

**16. இயேசு –** சமாரிய ஸ்திரீயுடன் பேசிமுடித்த பின்னர் சமாரியாவில் ஏற்பட்ட எழுப்புதல் (யோவான் 4:28-42).

**17. பேதுரு –** பெந்தெகொஸ்தே நாளில் இவரது பிரசங்கத்திற்கு பின் 3000 பேர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டபோது ஏற்பட்ட எழுப்புதல் (அப். 2).

**18. பிலிப்பு –** இவர் தேவனது இராஜ்ஜியத்தைக் குறித்து சமாரியாவில் செய்த பிரசங்கத்தினால் அங்கு ஏற்பட்ட எழுப்புதல் (அப். 8:5-12).

**19. பேதுரு –** லித்தாவிலே ஐனேயா என்கிற மனிதனை குணமாக்கிய, லித்தாவிலும், சாரோனிலும் ஏற்பட்ட எழுப்புதல் (அப். 9:32-35).

**20.பவுல் –** மூன்றாவது மிஷனரி பயணத்தின்போது எபேசுவில் மாயவித்தைக் காரராயிருந்த அநேகர் தங்கள் புஸ்தகங்களை சுட்டெரித்தபோது நிகழ்ந்த எழுப்புதல் (அப். 19:11-20).


தேவனுக்கே மகிமை

**தமிழ் பிரதேச அசெம்பிளிஸ் ஆஃப் காட்**

வழங்கும்




TV நிகழ்ச்சி

பாருங்கள்! பயனடையுங்கள் !!

தமிழன்

தொலைக்காட்சியில்

வியாழக்கிழமை தோறும் காலை 7.30 மணி முதல் 8.00 மணி வரை

தேவ செய்தி அளிப்பவர்கள்

Rev.P.S. ராஜமணி, Rev.D.மோகன், Rev.A.ஆபிரகாம் தாமஸ்

பிரதேச தலைவர்கள் மற்றும் மண்டல தலைமை போதகர்கள்

**Contact : Rev. I. Christudas, Director, Department of Evangelism & Church Planting**
Hope A.G. Church, No.1, Dr. Radhakrishnan St., Pallikaranai, Chennai - 100. Cell: 98412 98009



# நோவாவின் குடும்பம்

(ஆதியாகமம் 6-8)


**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**

செயலாளர், தமிழ் பிரதேச ஏ.ஜி. சபைகள்


வேதத்தில் அநேக குடும்பங்களை குறித்து ஆண்டவர் பதிவு செய்து வைத்திருக்கிறார். அதிலே நாம் கவனிக்க வேண்டிய ஒரு குடும்பம் “நோவாவின் குடும்பம்”. நோவா, கர்த்தர் கொடுத்த தரிசனத்தில், அவருடைய வார்த்தையை அப்படியே ஜனங்களுக்குப் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் தன்னுடைய குடும்பத்தை முழுவதும் ஆதாயப்படுத்த அவர் தவறவில்லை. நம்முடைய குடும்ப வாழ்க்கைக்கு சில காரியங்களை நோவாவின் குடும்பத்திலிருந்து கற்றுக்கொள்ள ஆண்டவர் உதவி செய்வாராக.

### 1. நோவாவின் தரிசனத்தை முழு குடும்பமும் ஏற்றுக்கொண்டது
### They CONCEIVED the same vision

ஆண்டவர் நோவாவை கொண்டு செய்ய நினைத்த காரியம் சரித்திரத்தில் ஒரு பெரிய மாற்றம். ஆனால், அது அவ்வளவு எளிமையானது அல்ல. அவை இதுவரையும் நடந்திராத ஒன்று, நம்புவதற்கு கடினமானது மற்றும் மனித மூளைக்கு புத்தியீனமான ஒன்று. ஆனால், ஆண்டவர் சொன்னதை நோவா அப்படியே செய்தான் என்று ஆதியாகமம் 6:22ல் கூறப்பட்டுள்ளது. நோவா மாத்திரம் அல்ல அவனுடைய முழு குடும்பமும் அந்த பரம தரிசனத்திற்கு கீழ்படிந்தது. உங்களுடன் தான் ஆண்டவர் பேசினார், ஆகவே நீங்களே அதை செய்து கொள்ளுங்கள் என்று அவருடைய மனைவி கூறவில்லை. ஏன் இந்த வயதில் உங்களுக்கு வேண்டாத வேலை என்று பிள்ளைகளும் கேட்கவில்லை. இது சாத்தியமா, உங்கள் அப்பாவிற்கு எடுத்து சொல்லுங்கள் என்று மருமகள்களும் கூறவில்லை. அனைவரும் அந்த பரம தரிசனத்தை ஏற்றுக் கொண்டு “ஒரே தரிசனம், ஒரே நோக்கம்” என்று செயல்பட்டார்கள்.

இன்றைக்கு குடும்பங்கள் சமாதானமாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்க தேவன் காண்பிக்கிற ஒரே பாதையில் குடும்பமாக செல்லுவது மிகவும் அவசியம். பிரிவினைகளுக்கு இடம் கொடுக்காமல், திருச்சபையை மையமாக வைத்து, சத்தியத்தின் அடிப்படையில் ஒரே நோக்கத்தில் பயணிக்க தீர்மானிக்கும் போது, நம்முடைய குடும்பத்தை தேவன் பாதுகாப்பார்.

### 2. நோவாவின் குடும்பம் தேவனோடு நெருங்கிய தொடர்பில் இருந்தது
### They had close COMMUNION with God

நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான் என்பதை ஆதியாகமம் 6:9ல் கூறப்பட்டுள்ள வசனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். அவனுடைய முழு குடும்பமும் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். நோவா அந்த சமயத்தில் ஒரு முன்பின் அறிந்திராத ஒரு பேழையை கட்டவேண்டும், அதற்கு தேவையான மரங்களை கொண்டு வரவேண்டும், இவைகளின் மத்தியிலும் தேவனுடைய வார்த்தையை ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும். ஆனாலும் நோவா தேவனோடு சஞ்சரிப்பதையும் குடும்பத்தோடு நேரம் செலவழிப்பதையும் அவன் மறக்கவில்லை. நோவா வேலை, வேலை என்று வேலையிலே மூழ்கியிருந்தால் நிச்சயமாய் அவருடைய குடும்ப ஒத்துழைப்பு கிடைத்திருக்காது. தேவ திட்டம் தேசத்தில் நிறைவேற, தன்னுடைய குடும்ப அர்ப்பணிப்பு முக்கியமானது என்று தன்னுடைய சிந்தனையில் எப்பொழுதும் அவர் சுமந்து கொண்டேயிருந்தார். அதன் பயனாக,

- ✶ தேவனுடைய திட்டம் அவருடைய முழு குடும்பத்திற்கும் விளங்கியது.
- ✶ தேவ பயம் உண்டானது.
- ✶ தேவனுடைய வார்த்தையை நம்பினார்கள்.
- ✶ தேவன் காண்பிக்கும் அனுகூலங்கள் கிடைக்கப்பெற்றது.

"நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம்" என்பதே நம்முடைய வாழ்வின் அடித்தளமாக இருக்கட்டும். எவ்வளவு வேலைகள் இருந்தாலும், தனியாகவும், குடும்பமாகவும் தேவனோடு நேரம் செலவழிப்பதை பிரதானப்படுத்துவோம். உங்கள் வீட்டில் குடும்பத்தோடு ஐக்கியமாய் சேர்ந்து ஜெபிக்கிற பழக்கங்கள் உண்டா என்பதை சிந்தித்துப் பார்ப்போம்.

### 3. நோவாவின் குடும்பத்திற்குள்ளே, ஒருவருக்கொருவர் நெருங்கிய தொடர்பில் இருந்தார்கள்

### They had strong CONNECTION with each other

அன்றைத்தினமே.... பேழைக்குள் பிரவேசித்தார்கள் என்று ஆதியாகமம் 7:13ல் வாசிக்கிறோம். நோவாவின் குடும்பத்தைத் தவிர மற்ற எந்த குடும்பமும் இரட்சிக்கப்படவும் இல்லை. பேழைக்குள் வருவதற்கு ஒருவர் கூட ஆயத்தமாக இல்லை. ஆனால் நோவாவின் குடும்பம் முழுவதும் வந்தது. பேழைக்குள் வருவதற்கு ஆயத்தப்படுத்த முடியவில்லை என்று நோவாவின் இருதயத்தில் வேதனைகளும், ஏக்கங்களும் இருந்தாலும் குடும்பம் கைவிடப்படவில்லை என்ற நிறைவான மகிழ்ச்சி அவர் உள்ளத்தில் இருந்தது.

இவ்வளவு பெரிய திட்டத்தை, நிச்சயமாக நோவா தனிமையாக செய்திருக்க முடியாது. கொப்பேர் மரமாக பார்த்து எடுக்க வேண்டும்,வெட்ட வேண்டும், கர்த்தர் சொன்ன அளவில் உருவாக்க வேண்டும், கீல் பூசவேண்டும். மிருகங்களையும், பறவைகளையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். It was a team project. Their hearts were connected together.

இருதயங்கள் இணைந்திருந்தபடியால்,

- ✶ தேவ திட்டம் எளிமையானது (God's plan became easy).
- ✶ முழு ஒத்துழைப்பு சாத்தியமானது (Full co-operation was achieved).
- ✶ வேலை முடிக்கப்பட்டது (God's work was completed).
- ✶ தெய்வீக ஆசீர்வாதங்கள் சுதந்தரிக்கப்பட்டது (Divine blessings were inherited).
- ✶ தெய்வீக பாதுகாப்பு உண்டானது (Divine protection was experienced).

ஒரே பாதையில் பயணிப்பதும், தேவனோடு நெருங்கி குடும்பமாக ஜீவிப்பதும், குடும்பத்தில் உள்ள அனைவரோடு நெருங்கிய தொடர்பில் இருப்பதும், இன்றைய காலத்தின் அவசியங்கள். குடும்பங்களை சீரழிக்க நினைக்கிற பிசாசின் தந்திரங்களை முறியடிப்பதற்கு, நம்முடைய இருதயங்கள் ஆண்டவரோடும் நம் குடும்பத்தினர் ஒவ்வொருவரோடும் இணைந்திருப்பது மிகவும் அவசியம். வீட்டில் உள்ள மகன்கள் மாத்திரமல்ல, மகள்களாக வீட்டிற்கு கொண்டு வரப்பட்ட மருமகள்களையும் ஆதாயப்படுத்துகிற கிருபைகளை நோவாவிற்கு கொடுத்தது போல நமக்கும் ஆண்டவர் தருவாராக.

மூன்று குறிப்புகள்தான் எழுதுவதற்கு இடம் உண்டு. தொடர்ந்து நோவாவின் குடும்பத்தை தியானியுங்கள் சத்தியங்களை கற்றுக்கொள்ளுங்கள், செயல்படுத்த ஆரம்பியுங்கள். வித்தியாசங்களை பார்க்க கர்த்தர் உதவி செய்வார்.

ஆண்டவரே! நோவாவின் குடும்பத்தை போல எங்கள் குடும்பங்களை மாற்றும். ஆமென்.



# எஸ்தரின் சரித்திரம்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.

All India National Director, Global University

வேதாகமத்தில் தனிநபர் சரித்திரமாகச் சொல்லப்படும் புத்தகங்கள் மூன்று : ரூத், எஸ்தர், யோபு. ஒரு பெண்ணின் பெயரால் குறிப்பிடப்படும் இரண்டு புத்தகங்களுள் எஸ்தர் புத்தகமும் ஒன்று; மற்றொன்று ரூத் புத்தகம். எஸ்தர் புத்தகம் சார்ந்த விபரங்களை இங்கு காண்போம்.

## சரித்திரப் பின்னணியம்

2 இராஜாக்கள் 24,25 அதிகாரங்களில் நாம் வாசித்து அறிகிற விபரங்களின்படி, நேபுகாத்நேச்சார் கி.மு.600,597,586 ஆகிய மூன்று வெவ்வேறு காலங்களில் தெற்கு ராஜ்யமாகிய யூதாவில் வாழ்ந்து வந்த யூதரைச் சிறைபிடித்துச் சென்றான். அவர்கள் எழுபது ஆண்டுகள் பாபிலோனில் வேதவாக்கியங்களின்படி சிறைப்பட்டிருந்தனர் (எரே.25:11,12; 29:10-14). இதன்பின்பு பாபிலோனிய வல்லரசு வீழ்ச்சியடைந்து, பெர்சிய சாம்ராஜ்யம் தலைதூக்கிற்று. தங்களிடத்தில் சிறைப்பட்டிருந்த யூதரைப் பட்சமாய் நடத்திய பெர்சிய மன்னனாகிய கோரேஸ் கி.மு.537-ல் அவர்களை விடுதலை செய்தான். அவர்கள் தங்கள் சொந்த தேசத்துக்குச் செல்லவும், எருசலேமில் இடிபட்டுக்கிடந்த தேவாலயத்தைத் கட்டவும், பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரின் தரிசனம் பெற்றான் (எஸ்றா 1:1-14). யூதர் ஊருக்குச் செல்ல விடுதலை விளம்பரப்படுத்தப்பட்டது. அதன்படி மூன்று வெவ்வேறுக் காலக்கட்டங்களில் யூதாவிலுள்ள எருசலேமுக்கு திரள்கூட்ட யூதர் திரும்பி வந்தனர்.

- செருபாபேல், என்னும் தலைவன் மற்றும் யோசுவா என்னும் பிரதான ஆசாரியன் தலைமையில் கி.மு..537-ல் வந்தவர்கள் 50,000க்கும் அதிகமானோர் (எஸ்றா 2:64,65).

- கி.மு.457-ல் எஸ்றாவின் தலைமையில் இரண்டாவது கூட்டத்தினர் வந்தனர் (எஸ்றா 7:1).

- கி.மு.445-ல் மூன்றாவது குழு, நெகேமியாவின் தலைமையில் திரும்பி வந்தனர் (நெகே.2:1-9).

இப்படி பலர் எருசலேமுக்குத் திரும்பி வந்தாலும், அங்கிருந்த எல்லா யூதரும் திரும்பி வரவில்லை. சுயதேசம் திரும்பாதவர்கள் விடுதலை உரிமையுடன் பெர்சியாவிலேயே இருந்துவிட்டனர். எஸ்தர் புத்தகச் சம்பவங்களனைத்தும் பெர்சிய பேரரசை ஆண்ட ஆகாஸ்வேரு மன்னனின் ஆட்சியில் (கி.மு.486-465) பெர்சியாவில் நடந்தவை ஆகும். எஸ்தர் புத்தகத்தில் பெர்சியாவிலேயேத் தங்கிட்ட யூதரின், வாழ்க்கையில் ஏற்பட்ட இனப்படுகொலை என்று பேரிடர்பாடு ஒன்றைப் பற்றியும், பரலோகத்தின் தேவனை நோக்கி எஸ்தர், மொர்தெகாய் முதலிய யூதர் அனைவரும் முறையிட்டதும், அவர் அவர்களுக்கு இரங்கி தம்முடைய சர்வ வல்லமை, இறையருள் ஆகியவற்றை வெளிப்படுத்தி அவர்களை விடுவித்த விபரங்களும் வருணிக்கப்பட்டுள்ளன.

## சம்பவச் சுருக்கம்



சூசான் பெர்சிய சாம்ராஜ்யத்தின் தலைநகரமாகும். அங்குதான் எஸ்தர் புத்தகச் சம்பவங்கள் நடந்தன. இன்று இந்நகரம் ஈரான் தேசத்திலுள்ளது: சுஷ் (Shush) என்பது அதன் தற்காலப் பெயராகும்.

**அகாஸ்வேரு :** அகாஸ்வேரு என்ற பெர்சிய மன்னன் ஆட்சி பீடத்திலிருந்தான். அகாஸ்வேரு கி.மு.486 முதல் 465 வரை இந்தியாவையும் உள்ளடக்கிய 127 நாடுகளைக் கொண்ட பெர்சியப் பேரரசை ஆண்டு வந்தான் (எஸ்தர் 1:1).

**பட்டத்துராணி வஸ்தி :** இவனுக்கு ஏராளம் மனைவிகளும், மறுமனையாட்டிகளும் உண்டு. அவர்களில் பட்டத்து ராணியாக வஸ்தி என்ற பேரழகி இருந்தாள். பிடிவாதமுள்ள இந்தப் பேரழகி, தனது கணவனாகிய ராஜா கட்டளையிட்டபோது அவனது நண்பர்களாகிய பிரபுக்கள் முன்பு வரமாட்டேன் என்றாள். முற்கோபியான அகாஸ்வேரு அவளைப் பட்டத்து ராணி என்ற ஸ்தானத்திலிருந்து தள்ளிப்போட்டான். அரண்மனையிலிருந்து துரத்தப்படவில்லை; எனினும், தனது ராஜாத்தி ஸ்தானத்தை இழந்தாள்.

**புதிய பட்டத்து ராணி :** வஸ்தியின் ஸ்தானத்தில் உத்தமியும் (1:19); ரூபவதியும் (2:2). பார்வைக்கு நன்றாயிருந்த (2:9) எஸ்தர் பட்டத்து ராணியானாள். வஸ்தியின் ராஜகிரீடம் எஸ்தருக்குக் கொடுக்கப்பட்டது. இந்த எஸ்தர், அடிமைத்தன தேசத்தில் யூதர் குலத்தில பிறந்தவள். இவள் தனது பெற்றோரை இழந்து அனாதையானாள். இவளது பெரியப்பா மகன் மொர்தெகாயும், அவன் மனைவியும், இவளைக் குமாரத்தியாகத் தந்தெடுத்து வளர்த்து வந்தனர். இவளது எபிரெயப் பெயர் அத்சாள் என்பதாகும். எஸ்தர் என்ற பெர்சியப் பெயர் இவளுக்கு கொடுக்கப்பட்டது.

**மொர்தெகாய் :** சிறைப்பட்டு வந்தவருள் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவன் இந்த மொர்தெகாய் (2:5). நேபுகாத்நேச்சார் இரண்டாம் முறை எருசலேம் வந்து (கி.மு.597) யோயாக்கீன், எசேக்கியேல் போன்றோரை பிடித்துக்கொண்டு போனபோது, இவனும் அவர்களுடன் பாபிலோனுக்கு கொண்டுபோகப்பட்டான் (2:6). எஸ்தர் புத்தகச் சம்பவக் காலத்தில் இவன் வயது முதிர்ந்த யூதனாய் இருந்திருக்க வேண்டும். எஸ்தர் பட்டத்து ராணியானபோது, அவளது வளர்ப்புத் தந்தையும், ஒன்றுவிட்ட சகோதரனுமாகிய மொர்தெகாய்க்கு அரண்மனை வாயிலில் மெய்க்காப்பாளராக பணி கிடைத்தது (3:11). இதன்மூலம் பட்டத்து ராணியின் அரண்மனை முன்பு உலாவும் உரிமையும் அவனுக்குக் கிடைத்தது.

**ராஜ துரோகமும், ராஜ விசுவாசமும் :** அரண்மனை வாயிலில் மெய்க்காப்பாளர் பணியிலிருந்த பிக்தான், தேரேசு என்னும் இரண்டு பிரதானிகள் ராஜாவைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினர். இதை அறிந்த மொர்தெகாய், எஸ்தர் மூலம் ராஜாவுக்கு விபரம் அறிவித்தான். சதி முறியடிக்கப்பட்டு, சதி பண்ணினவர்கள் தூக்கிலிடப்பட்டார்கள். மொர்தெகாயின் பெயரால் இந்த ராஜா விசுவாச செயல் பெர்சிய ராஜாக்களின் நாளாகம நடபடி புத்தகத்தில் குறித்து வைக்கப்பபட்டது.

**ஆமான் ஆளும் அதிகாரத்தில் உயர்த்தப்படலும் – ஆமானின் சதித்திட்டமும்**

ஆமான் ஒரு அமலேக்கியன். ராஜா இவனுக்குச் சகல பிரபுக்களுக்கும்

மேலாக தனக்கு அடுத்த ஸ்தானத்தில் பதவி உயர்வு கொடுத்தான். ஆமான் கடவுள் நிலைக்குத் தன்னை உயர்த்தி, அனைவரும் முழங்கால்படியிட்டு தன்னை நமஸ்கரித்து (ஆராதனை செய்யும் விதமாக) மரியாதை செய்ய வேண்டும் என எதிர்பார்த்தான். பரலோக தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை என்பதில் பக்தி வைராக்கியமாயிருந்த மொர்தெகாய் அப்படி அவனை வணங்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த ஆமான் மொர்தெகாயையும் அவனது யூத இனத்தையும் இனப்படுகொலை செய்யத் திட்டமிட்டு அதற்கான ராஜ அனுமதியையும் பெற்றான். குடியும் கும்மாளமும் அடித்த வேளையில் கொடுத்த ராஜக்கட்டளை இது. (ஆனால் பட்டத்து ராணி எஸ்தரும் யூத இனத்தவளே என்பது அவர்களனைவரும் அறியாத உண்மை).

## தூக்கம் வராத அன்று ராத்திரியில்

அன்று இரவில் ராஜாவுக்கு தூக்கம் வரவில்லை. எனவே நாளாகம நடபடிகளை வாசித்தான். பிக்தானும் தேரேசும் செய்த சதியும். மொர்தெகாயின் தலையீட்டால் சதி முறியடிக்கப்பட்டதும், இதற்காக மொர்தெகாய்க்கு சம்மானம் தரப்படவில்லை என்பதையும் ராஜா அறிந்துகொண்டான்.

## காரியம் மாறுதலாய் முடிந்தது

எஸ்தர் ராஜாவை மன்றாடி கட்டளை மாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தினான் மொர்தெகாய். யூதரனைவரும் மூன்றுநாள் உபவாசித்து ஜெபிக்க கேட்டுக்கொண்டாள் எஸ்தர். காரியம் மாறுதலாய் முடிந்தது. மூன்று நாள் சிறப்பு உபவாசத்திற்கு எஸ்தர் ஏற்பாடு செய்யச்சொன்னாள். ராஜாவைக் கெஞ்சி, மன்றாடி, தன் ஜனத்துக்கு விடுதலை வாங்கினாள். தன்னை வணங்காத மொர்தெகாயைத் தூக்கிலிட 50 முழ உயரமானத் தூக்குமரம் ஒன்றைச் செய்து, அதற்கு அனுமதி பெற ராஜாவை நடுராத்திரி தேடிவந்த ஆமான். மொர்தெகாயை கனம்பண்ணும்படி ராஜாவால் பணிக்கப்பட்டு, மனம் புழுங்கி, முக்காடிட்டுக் கொண்டு வீட்டுக்குப்போனாள்.

## ராஜ தந்திர விருந்தும், மன்றாட்டும்

ஆமானையும் ராஜாவுடன் விருந்துக்கு அழைத்து, ராஜாவுக்கு விபரத்தைச் சொல்லி, அவனிடம் மன்றாடி தனது ஜனத்துக்கு விடுதலை வாங்கி தந்தாள் எஸ்தர். ஆமான் மொர்தெகாய்க்குச் செய்த தூக்குமரத்தில் ராஜ கட்டளையால் தூக்கில் போடப்பட்டான். யூதரின் பகைஞர் அனைவரும், சூசானிலும், பெர்சிய சாம்ராஜ்ஜியம் முழுவதிலும் அழிக்கப்பட்டனர்.

மொர்தெகாய் ராஜாவினிடத்தில் வரும்படி பணி உயர்வு பெற்றான். யூதருக்கு நிகழவிருந்த பெரிய இனப்படு கொலையிலிருந்த, எஸ்தர் நிமித்தம் யூதகுலம் விடுவிக்கப்பட்டது. ஆண்டவருடைய அதிசயமான இறையருளும், விடுதலையும், யூதருக்குக் கிடைத்தது. எகிப்திலிருந்து விடுதலைபெற்று வந்தபோது பஸ்கா பண்டிகை யூதரின் பண்டிகை அட்டவணையில் சேர்க்கப்பட்டதுபோல, இக்காலத்தில் ஏற்பட்ட யூதரின் விடுதலையைக் கொண்டாட பூரிம் பண்டிகை சேர்க்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி, பூரீம் பண்டிகையின் வருடாந்திரக் தொடக்கமாயிருந்தது (9:17-32).

# பரலோக தேவனுடைய அதிசய நடத்துதல்

எஸ்தர் புத்தகம் முழுவதிலும், பரலோக தேவனுடைய அதிசய நடத்துதலையும் இறையருளையும் நாம் காணமுடிகிறது.

வஸ்தி வரமாட்டேன் என முரண்டு பிடித்ததும் தேவ செயலே. எஸ்தருக்கு

ராஜாவின் கண்களில் தயவு கிடைத்ததும் இறையருளே. மொர்தெகாய், சதியினைப் பதிவு செய்ததும் தேவ வழிநடத்துதலே, ராஜாவுக்குத் தூக்கம் வராத ராத்திரியும், ஆயத்தமாக்கப்பட்ட தூக்குமரச் செய்தியுடன் செயல்பாட்டை முடிக்க அர்த்த ராத்திரியில் ராஜாவை தேடிவந்த ஆமான் மொர்தெகாய்க்கு மரியாதை செய்த தன்னிலை அவமானமும் இறையருளே!

அரண்மனை வாயிலண்டை பணியிலிருந்து, ராஜ சமூகத்தில் வந்து (8:1), ஆமானின் அரண்மனைக்கு அதிகாரியாக மாறி (8:2), ராஜாவினிடத்தில் கனம்பெறும்படி மொர்தெகாய் கொண்டுவரப்பட்டான்; பரலோக தேவனின் அதிசய வழிநடத்ததுதலே ஆகும். இந்த மொர்தெகாய் ராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டான். யூதருக்குள் பெரியவனானான், அனைத்து யூதருக்கும் பிரியமானவனானான். தன் ஜனத்தாரின் நன்மையைத் தேடி அவர்களுக்கெல்லாம் சமாதானமுண்டாகப் பேசுகிறவனாயுமிருந்தான். இவை அனைத்தும் நமதாண்டவரின் அதிசயமான வழிநடத்துதலே; இறையருளே!

பெர்சியர் உலகை ஆண்ட அந்தக்காலத்தில் (கி.மு.550-330) எஸ்தர் மட்டும் எழுந்திராவிட்டால், பெர்சிய சாம்ராஜ்ஜியத்தில் வாழ்ந்த அத்தனை யூதருக்கும் அழிக்கப்பட்டிருப்பார்கள். நெகேமியா கி.மு.445-ல் (நெகேமியா 2-ம் அதிகாரம்) எருசலேமுக்கு வந்து எருசலேமின் மதில்களை எடுத்துக்கட்டினதும் சாத்தியமாகியிருக்காது. எஸ்தர் காலத்திலிருந்த இஸ்ரவேல் தேசத்தையும் உள்ளடக்கிய பெர்சிய சாம்ராஜ்ஜியத்தில் வாழ்ந்த யூதர் அனைவரும் அழிந்த நிலை ஏற்பட்டிருக்கும். உலக இரட்சகர் இயேசு யூத இனத்திலிருந்து தோன்றுவார் என்ற மீட்பின் திட்டம் முறியடிக்கப்பட்டிருக்கும். ஆனால் நமதாண்டவரின் அதிசயமான செயல்களும், இறையருளும், காரியங்களை மாறுதலாய் முடியப்பண்ணின.

### எஸ்தர் புத்தகம் நமக்குப் போதிப்பது என்ன?

யூதனாகிய மொர்தெகாய் அதாவது யெகோவா தேவனுடன் உடன்படிக்கை செய்த மொர்தெகாய், சொல்லிலும், செயலிலும், தேவ ஞானமும், பக்தி வைராக்கியமும் உள்ளவனாயிருந்ததுபோல, இன்று கிறிஸ்தவர்களாகிய நாமும் இருக்க வேண்டும்.

அடிமைத்தன தேசத்திலும் பரலோக தேவன் தெரிந்துகொண்ட இனத்தின் மேன்மைக்காக, “நான் செத்தாலும் சாகிறேன்” எனக்கூறி ராஜசமூகத்தில் பிரவேசித்த துணிச்சலும், உபவாசித்து மன்றாடி ஜெபித்த எஸ்தரின் பக்தியும், நம் அனைவரையும் பற்றிப்பிடிக்க வேண்டும்.

## நமது தேவன் சர்வ ஆளுமையுள்ளவர்

யூதாவிலிருந்தாலும், பெர்சியாவிலிருந்தாலும், தமது நாமத்துக்கு நடுங்குகிறவர்களுக்கும், பக்தி வைராக்கியமாய் வாழுகிறவர்களுக்கும் தமது அதிசயமான செயல்களை, இறையருளாய் பொழியவும், தாம் இன்றும் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர் என்று காட்டவும் எப்பொழுதும் கவனமாயிருக்கிறார். அடிமைத்தனம் மாறும், கலங்கிய சூசான் நகரம் (3:15). ஆர்ப்பரித்து மகிழும் (8:15). முரண்டுபிடிக்கும் வஸ்தி அகற்றப்படுவாள்; கீழ்ப்படியும் எஸ்தர் உயர்த்தப்பட்டு ஸ்திரப்படுத்தபடுவாள். ஆமான் அழிவான்; மொர்தெகாய் உயருவான் (8:15).

எதிரிடையான சூழ்நிலையிலும் நமதாண்டவரின் ஆச்சரியமான, அதிசயமான விடுதலைச் செயல்கள் இன்று உங்களை விடுவிக்கும்; அவரே சர்வ ஆளுகையுள்ள தேவன்!.



# சீஷராக்கும் இலக்குடன் ஆத்தும ஆதாயம் செய்யுங்கள்

Rev. J. தேவதாசன் கலையரசன்
தலைமை போதகர், அம்பத்தூர் மண்டலம்

**சுவிசேஷ ஊழியம்**
**பாகம் - 5**

இயேசு கிறிஸ்துவின் இறுதிக் கட்டளை புதிய ஏற்பாட்டின் ஐந்து இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது மத்தேயு 28:19-20; மாற்கு 16:15; லூக்கா 24:46-48; யோவான் 20:21; அப்.1:8. மத்தேயு 28ம் அதிகாரம் 19,20 வசனங்களில் நான்கு கட்டளை வார்த்தைகள் உள்ளன. செய்யப்பட வேண்டிய பணிகளின் அடிப்படையில் ஒரே ஒரு வார்த்தையில் அடக்கிச் சொல்ல வேண்டுமானால் சீஷராக்குங்கள் என்ற பதத்தில் தான் சொல்ல முடியும். சகல ஜாதியாரையும் சீஷராக்க வேண்டுமா? புறப்பட்டுச் செல்ல வேண்டும். ஞானஸ்நானம் கொடுத்து, உபதேசம் பண்ண வேண்டும். அப்படியானால் புறப்பட்டுப் போவதும், ஞானஸ்நானம் கொடுப்பதும், உபதேசம் பண்ணுவதும் முக்கியமில்லையா? நிச்சயம் முக்கியமானதுதான். சீஷராக்கவே புறப்பட்டுச் செல்கிறோம். சீஷராக்கவே சுவிசேஷம் சொல்லுகிறோம். சீஷராக்கவே ஞானஸ்நானம் கொடுக்கிறோம். சீஷராக்கவே உபதேசம் கொடுக்கிறோம். சீஷராக்கும் நோக்கம் இல்லாமல் இன்னும் எத்தனை வருடங்கள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்தாலும் தேசம் சந்திக்கப்பட வாய்ப்பில்லை. ஏனென்றால் முன்வாசல் வழியே நூற்றுக்கணக்கில் வருவார்கள். புறவாசல் வழியாக நூற்றுக்கணக்கானோர் திரும்பிச் செல்வார்கள். இதைக் கட்டுப்படுத்த இயலாது. எனவே சீஷராக்குவதை இலக்காக கொண்டு ஆத்தும ஆதாயம் செய்வதே இன்றைய பிரதான தேவை.

## I. சீஷத்துவத்தைப் புரிந்த கொள்ளுங்கள்

சீஷன் என்ற பதம் (Disciple) மத்தடீஸ் என்ற கிரேக்க பதத்திலிருந்து வந்தது. இதன் பொருள். மாணவன் என்பதாகும். குரு ஒருவருடன் கூடவே இருந்து அவருடைய போதனைகளைக் கற்றுக்கொண்டு, பின்பற்றுபவரே சீஷர் ஆவார். எனவே இயேசுவைப் பிடிக்கும் என்று சொல்லிக்கொண்டு அவர்களின் பழைய நிலையிலேயே இருப்பவரை சீஷர் என கூறிவிட முடியாது. ஒரு குறிப்பிட்ட நாளில் சுவிசேஷம் கேட்டவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் மேல் ஏற்பட்ட விசுவாசம் இரட்சிப்பின் அனுபவத்தின் துவக்கமாகும். இனி அவர்கள் வாழ்நாள் முழுவதும் இயேசுவை பின்பற்றும் தீர்மானத்துடன் அவரது போதனைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும். விசுவாசித்து, பின்பற்ற வேண்டும் (மத்.11:28:30).

அதேசமயம் சீஷன் அல்லது சீஷத்துவம் என்பது வளர்ச்சி என்ற நிலைக்கும் மேலான கிறிஸ்துவ அனுபவமாக கருதிவிடக் கூடாது. அதாவது இன்றுதான் இரட்சிக்கப்பட்டேன். இன்னும் சீஷனாகவில்லை என்கிறார்கள் சிலர். ஆனால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களை (அப்.2:41) விசுவாசிகள் என்றும் (2:44), சபையார் என்றும் (5:11) சொல்லப்பட்டதுப் போலவே சமமான அர்த்தத்தில்தான் சீஷர்கள் (6:1) என்ற பதம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதைக் கவனியுங்கள். நான் சாதாரண விசுவாசிதான் இன்னும் சீஷராகவில்லை என்ற தவறான புரிதலினால் புது விசுவாசிகள் தங்கள் வாழ்க்கை மாற வேண்டும் என்பதை

குறித்து அக்கறையற்றுப் போகிறார்கள். சுவிசேஷம் சொல்பவர்களோ சுவிசேஷம் சொல்லிவிட்டோம். அப்பாடா முடிந்தது என்று திருப்தி கொள்கிறார்கள். தங்கள் பணி சுவிசேஷம் சொல்வதுதான். தங்கள் சபையோ அல்லது வேறுயாரோ வந்து அவரை சீஷராக்கட்டும் என்ற மனநிலைக்கு வந்து விடுகிறார்கள்.

மறுபுறம் அதைப் போல இயேசுவின் அபிமானியாக இருந்தாலே அவர்களும் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று விட்டுவிடுவதும் தவறே. (அபிமானி என்றால் எனக்கு இந்த அரசியல் கட்சி பிடிக்கும், இஷ்டம். ஆனால் அக்கட்சியில் தொண்டன் கிடையாது என்று சொல்வதற்கொப்பானது). அதாவது இயேசு எனக்கு ரொம்ப இஷ்டம், நான் சிறுவயதிலே கேள்விப்பட்டிருக்கிறேன் அல்லது ஏற்கெனவே இயேசுவின் படத்தையும் வைத்து கும்பிடுவது இஷ்டம் என்பார்கள். ஆனால் அவரது தொண்டராக, சீடராக இருக்கும்படி தங்கள் வாழ்வை அர்ப்பணித்து இருக்க மாட்டார்கள் (மத்.10:38).

நமது சபைகளிலும் அநேகர் கிறிஸ்துவின் அபிமானியாக இருக்கிறார்கள். அவரது தொண்டர்களாக, சீஷர்களாக இருப்பவர்கள் மிக குறைவு. இது தவறு .... இரட்சிப்பின் அனுபவத்தை தவறாக புரிந்து கொள்வதினால் ஏற்படுகிறது.

தங்கள் தேவையைச் சந்திக்கும் தெய்வமாக அற்புத சக்தியாக மட்டும் இயேசுவைப் பார்க்கிறார்கள். வணங்க ஆரம்பிக்கிறார்கள். அவர் நம்மை அழைத்ததால் நாம் பெற இருக்கின்ற ஆசீர்வாதங்கள் இன்னதென்று அறிய, விரும்புகிறார்கள். ஆனால் தேவனுக்கு தங்கள் வாழ்க்கையின் மேலுள்ள அதிகாரத்தை அறியாமல் அல்லது ஆளுகையை ஏற்றுக்கொள்ளாமல் விட்டுவிடுகிறார்கள் (எபே.1:18). அதைப்போல சுவிசேஷம் சொல்பவர்கள் கிறிஸ்தவ மதத்தில் ஒருவரை இணைப்பதாக தவறாக கருதிவிடுகிறார்கள். ஒருவரை இரட்சிப்பிற்குள் நடத்துவது என்பது கிறிஸ்துவுடன் அவருக்கு உறவு ஏற்படச் செய்வதே ஆகும். அந்த உறவிலே வளரும்போது, சீடராகிறார். அபிமானியிலிருந்து தொண்டராக மாறுகிறார். எனவே நற்செய்தி சொல்லிவிட்டு விடுவது கூடாது. சுவிசேஷம் கேட்பவர் கண்களை மூடி ஜெபித்துவிட்டார் என்பதோடு நமது பணி முடிந்துவிடாது. தொடர்ந்து பின் தொடர்புபணி செய்து (follow-up) அவரை இரட்சிப்பின் நிச்சயத்தில் நிலைநிறுத்துவதும், கிறிஸ்தவ அனுபவங்களில் வளர ஊக்கப்படுத்துவதும் ஆத்தும ஆதாய பணியின் ஒரு அம்சம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால் சுவிஷேசம் சொல்வதுடன் நிறுத்தாமல், கேட்பவர்களை சீஷராக்கப் பழகுவீர்கள்.

## II. சுவிசேஷம் சொல்பவர்களின் முக்கியப்பணி

இயேசு கிறிஸ்துவைப் பூரணமாக அறிவிப்பதே சுவிசேஷம். அவர் யார்? அவர் நமது மீட்புக்காக என்ன செய்தார்? என்ற செய்தியைக் கேட்போர் பேறு பெற்றோர். கேட்டவர்களில் எல்லாரும் விசுவாசித்திருக்காவிட்டாலும்(ஏசா 53:1). விசுவாசித்தோர் அனைவரும் இரட்சிக்கப்படுகிறார்கள் (எபி.4:2). வணங்குவதினால் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறியமுடியும் (ரோமர் 10:13-17). இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்ட வேத வசனங்களின் உண்மையை ஒருவர் நம்பும்போது, மனதில் ஏற்றுக்கொள்ளும்போது அவரது உள்ளத்தில் மட்டுமல்ல, வெளியேயும் காணக்கூடிய மாற்றங்கள் ஏற்படும் (அப்.9:11).

சுவிசேஷம் சொல்பவர்கள் கேட்பவர்களுக்குள் விசுவாசம் வந்திருக்கிறதா என்பதை கண்களினால் காணமுடியாது. ஐம்புலன்களினால், தொடு உணர்வில் உணர முடியாது. ஆனால், அவர்களுக்குள் ஏற்படும் வெளியரங்கமான

மாற்றங்களை நீங்கள் காணமுடியும். எனவே வெளியரங்கமான மாற்றங்கள் நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும் அல்லது வெளியரங்கமான மாற்றங்களில் வளர உதவிட வேண்டும். இதுவே நமது பின்தொடர்பு பணியின் நோக்கமாக இருக்க வேண்டும். பவுலின் மனமாற்றத்தின் போது வெளியரங்கமாக அவர் ஜெபித்ததை அனனியாவால் பார்க்க முடிந்தது. அதை மட்டும் பார்க்காதிருந்தால், முந்தய சவுலைக் குறித்த பயத்தோடு அனனியா ஓடியிருப்பார். எனவே உங்கள் மூலம் சுவிசேஷம் கேட்பவர்களுக்குள் நடைபெற வேண்டிய வெளியரங்கமான மாற்றங்கள் முக்கியமானது. அதில் வளர உதவிடுங்கள்.

பின்தொடர்பணி என்பது, கிறிஸ்தவ அனுபவத்தில் அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை போக்கும் நோக்கம் கொண்ட ஊழியம். நடைமுறைக் கிறிஸ்தவ வாழ்வில் அனுபவ சாட்சியாக உங்களை அவர்களிடம் வெளிப்படுத்தும் அளவு கிறிஸ்துவின் மேல் உள்ள நம்பிக்கையில் அவர்கள் வேகமாக வளருவார்கள். பின்தொடர்புபணி புது விசுவாசிகளுக்கு வழிகாட்டலாகவும் ஆவிக்குரிய நிலையில் போஷிப்பதாகவும் இருக்க வேண்டும். ஒரு நபர் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கச் செய்யும் ஊழியமே பின்தொடர்பு பணி, அவர்கள் சத்தியத்தை பூரணமாக புரியும் வரையில், சபைக்கு தாமாக வருமட்டும் திரும்ப திரும்ப சந்திக்க வேண்டும்.

## III. சீஷர்களில் உருவாக வேண்டிய வெளியரங்கமான மாற்றங்கள்

புது விசுவாசிகள் கிறிஸ்தவ நம்பிக்கையில் வளர வேதத்தை வாசிக்க வேண்டும். உங்கள் மூலம் சத்தியம் கேட்டவர்கள், அவர்கள் வேதத்தின் மேல் பிரியம் கொள்ள வைப்பதுவரை உங்கள் ஊழியம் தொடரட்டும். கரத்தரை அறிய அறிய வாழ்க்கை மாறும். சத்தியத்தை அறியும் அளவே விடுதலை வாழ்வு என்பதை அவர்களும் உணர்த்தப்பட வேண்டும் (யோ 8:32).

ஜெபம் என்பதை அவர்கள் மொழியில் (உம். பிரார்த்தனை, வேண்டுதல்) கற்றுக்கொடுக்க வேண்டும். எடுத்தவுடனே உங்கள் அளவில் எதிர்பாராமல், உங்கள் அப்பாவோடு பேசுவது போல பேசுங்கள், கேளுங்கள் என்று சொல்லிக் கற்றுக்கொடுங்கள் (மத்.7:7).

சபைக்கு அழைத்து வர மறவாதீர்கள். விசுவாசித்த அநேகர் பின்மாற்றம் அடைந்ததற்கு காரணம் ஏதோ ஒரு தடையினால் சபைக்கு வர முடியாமல் போனதால்தான். எனவே சபை கூடிவருதலில் அவர்களை பழக்குங்கள் (எபி.10:24,25).

உங்கள் சபையின் போதகர், சக விசுவாசிகளை அவர்களுக்கு அறிமுகம் செய்து வையுங்கள். சபையின் ஐக்கியம் அவர்களை ஆவியில் அனல்கொள்ளச் செய்திடும். பக்திவிருத்தியடையச் செய்யும் (எபே.4:12). தாங்கள் பெற்ற அனுபவங்களை தங்கள் நண்பர்களுக்கு எவ்வளவு விரைவில் சொல்ல முடியுமோ, சொல்லச் செய்யுங்கள். அதுவே அவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தும்.

### இறுதியாக

ஆத்தும ஆதாயம் என்பது வெறுமனே பொழுதுபோக்காக செய்துவிட முடியாது. திறமையை வெளிப்படுத்தும் கலையாகவும் (Art) கற்றுக்கொள்ள முடியாது (மத்.4:19). ஏனெனில் ஆத்தும ஆதாயம் என்பது கர்ப்ப வேதனைப்படும் ஊழியமாகும் (கலா.4:19). இருளின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கும் ஆவிக்குரிய போராட்டமாகும் (அப்.26:18) (Spiritual Warfare). இத்தனை கடினமான பணியா? என்று திகைத்து விடாதீர்கள். பெரியவேலை, விஸ்தாரமான பணி அவ்வளவுதான்!.



# பெற்றோரை சந்தோஷப்படுத்துவது எப்படி?


Rev. R. நெல்சன் ஞானகுமார்

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்


"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக (உபாகமம் 5:16).



மாணவர்களே! உங்களைவிட உங்கள் பெற்றோர் படிப்பில், அழகில், அந்தஸ்த்தில், அறிவில் குறைந்திருக்கலாம். ஆனாலும் நீங்கள் இந்த அளவிற்கு வருவதற்கு காரணம் உங்கள் பெற்றோரும் ஒரு காரணமாகும். எனவே உங்கள் நிமித்தம் சந்தோஷப்பட வேண்டுமே தவிர வேதனைப்படக்கூடாது.

கீழ்க்கண்ட காரியங்களைச் செய்ய தீர்மானியுங்கள் உங்கள் பெற்றோரை சந்தோஷப்படுத்துங்கள், நன்றாயிருங்கள்.

### 1. கீழ்ப்படிதல்

"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம்" (எபேசியர் 6:1; கொலோசெயர் 3:20).

உங்கள் பெற்றோர் ஒரு காரியம் செய்யச் சொல்லும்போது உடனே கீழ்ப்படிவது நல்லது. சில பிள்ளைகள், பத்து முறை அம்மா சொன்னபிறகு தான் ஒருமுறை எரிச்சலோடு கீழ்ப்படிவார்கள். உங்கள் பெற்றோர் சொல்வது வேதத்திற்கு முரணானதாக இல்லாவிட்டால், கீழ்ப்படியுங்கள். தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை செய்யச் சொன்னால், அன்பாக அதை எடுத்துச் சொல்லி அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்யுங்கள். கீழ்ப்படியாத துஷ்ட பிள்ளைகள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்ற நியதி பழைய ஏற்பாட்டில் இருந்தது (உபா. 21:18-21).

### 2. கனம் பண்ணுதல்

"தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோம்" (நீதி.20:20). "உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணாதே" (நீதி.23:22).

பெற்றோர் உங்களைவிட அறிவில், அழகில் குறைந்தவர்களாயிருக்கலாம். ஆனாலும் நாம் இந்த அளவிற்கு வருவதற்கு அவர்கள் முக்கிய காரணமாயிருந்திருக்கிறார்கள். அவர்களை நாம் மதித்தால் உங்கள் எதிர்காலம் ஆசீர்வாதமாயிருக்கும். எனவே பெற்றோரை அசட்டைபண்ணக்கூடாது. பெரிசு உனக்கு ஒன்னும் தெரியாது. அமைதியாயிரு என்றெல்லாம் அலட்சியமாக பேசக்கூடாது. சொல்லி அவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும்.

## 3. ஞானமுள்ளவர்களாயிருத்தல்

"ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்; மூடத்தனமுள்ளவனோ தாய்க்குச் சஞ்சலமாயிருக்கிறான்" (நீதி.10:1). "ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்; மதியற்ற மனுஷனோ தன் தாயை அலட்சியம் பண்ணுகிறான்" (நீதி.15:20).

நன்றாக படித்து தரமுள்ள மதிப்பெண் எடுத்தால் பெற்றோர் சந்தோஷப் படுவார்கள். பள்ளியில், கல்லூரியில், சபையில், சமுதாயத்தில் ஒழுக்கமுள்ள மாணவன் என்ற பெயர் எடுத்தால் பெற்றோர் சந்தோஷப்படுவார்கள். உங்கள் நிமித்தம் தேவனுடைய நாமம் படிக்கிற இடத்தில் மகிமைப்பட வேண்டும். உங்களை நம்பி ஒரு காரியத்தைச் செய்ய பெற்றோர் கேட்டுக் கொண்டால், அதை புத்தியாய், நேர்த்தியாய் செய்து முடிக்க வேண்டும் (1 சாமு.18:5).

## 4. ஆண்டவருடைய பிள்ளையாயிருத்தல்

"நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூறுவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான்" (நீதி.23:24). "என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை" (3 யோவான் :4).

பெற்றோர் சொல்லாமலேயே தினமும் வேதம் வாசிக்க வேண்டும். சபைக்கு சரியான நேரத்திற்கு செல்ல வேண்டும். சபையில் ஈடுபாடுடையவராக இருக்க வேண்டும். பரிசுத்தமானவராக இருக்க வேண்டும். தொலைக்காட்சியில் தேவையற்ற காரியங்களை பார்க்கக்கூடாது. கெட்ட நண்பர்களுடன் சேர்க்கை இருக்கக் கூடாது. அப்போது பெற்றோர் சந்தோஷப்படுவார்கள்.

## 5. உதவி செய்தல்

"ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலை செய் என்றான். அதற்கு அவன் : மாட்டேன் என்றான். ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன் : போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள் : மூத்தவன் தான் என்றார்கள்"(மத்.21:28–30).

பாத்திரம் கழுவுதல், வீட்டை சுத்தம் செய்தல், வீட்டில் உள்ள மரம், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி, சுத்தம் செய்தல், வாகனங்களைச் சுத்தம் செய்தல், கடைக்குபோகுதல், சமைத்தல், தகப்பனுடைய தொழிலில் முடிந்த உதவி செய்தல்..... போன்ற ஏதாவது உதவிகளை செய்தால் பெற்றோர் சந்தோஷப்படுவார்கள். உங்கள் வீட்டில் எத்தனை வேலைக்காரர்கள் இருந்தாலும், வீட்டிலுள்ள சில வேலைகளை கற்றுக்கொள்வது, உங்கள் எதிர்காலத்திற்கு நல்லது. உடல் நலத்திற்கும் ஏற்றது.

சில மாணவர்கள் அம்மா சமைத்துப் போடுகிறதை நன்றாக சாப்பிடுவார்கள். நன்றாக தூங்குவார்கள். பின் வெளியிலே ஊர் சுற்றப் போய்விடுவார்க்ள. நண்பர்களோடு அரட்டையடிக்கப் போய் விடுவார்கள். இரண்டு வேளை சாப்பாடில்லாமல் காயப்போட்டால் தானே உங்களுக்கு தெரியும்..

சில மாணவர்கள் சபையில் எல்லா வேலைகளையும் முகம் கோணாமல் செய்வார்கள். ஆனால் வீட்டிற்குபோனால் ஒருவேலையும் செய்யமாட்டார்கள். மாணவர்களே வீட்டில் உங்களுடைய சாட்சி முக்கியம்.

நீங்கள் பெற்றோருக்கு உதவி செய்தால் பெற்றோரோடுள்ள உறவு ஆரோக்கியமானதாக இருக்கும்.

### 6. பாராட்டுதல்

அவ்வப்போது உங்கள் பெற்றோருக்கு உங்களால் முடிந்த வெகுமதிகளை வாங்கிக்கொடுங்கள். பிறந்தநாள், திருமண நாள்.. போன்ற தினங்களில் கொடுக்கலாம். அதிகமான பணத்திற்கு வாங்கிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. கொடுக்க வேண்டுமென்கிற உள்ளம்தான் முக்கியம். அவர்கள் உடுத்தியிருக்கிற ஆடையை பாராட்டுங்கள். ஆகாரத்தை பாராட்டுங்கள்.

### 7. சகோதர ஐக்கியம்

''சகோதர சகோாதரிகளுடன் பகைமை கூடாது. சில நேரங்களில் வாக்குவாதங்கள், முரண்பாடுகள் வரலாம். ஆனால் சூரியன் அஸ்தமிக்கு முன்னே உன் எரிச்சல் தணியக்கடவது. நிரந்தர எதிரியாய் இருக்கக்கூடாது. நான் இனிமேல் பேசமாட்டேன். ஒரு உதவியும் செய்யமாட்டேன் என்ற நிலைக்குபோய் விடக்கூடாது. "தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?" (1 யோவான் 4:20).

## தேசத்தின் எழுப்புதலுக்காக தேவன் தேடும் மனிதன்

1. ஜெபமே அவனது முக்கிய அலுவலாக இருக்க வேண்டும்.
2. ஆத்தும அறுவடையே அவனது குறிக்கோளாக இருக்க வேண்டும்.
3. தேவ சமூகமே அவனது இன்பமாக இருக்க வேண்டும்.
4. தேவ ஊழியமே அவனது பாரமாக இருக்க வேண்டும்.
5. கடின உழைப்பே அவனது பிரியமாக இருக்க வேண்டும்.
6. கர்த்தருக்காகப்படும் பாடுகள் அவனுக்கு சந்தோஷமாக இருக்க வேண்டும்.
7. உலகம் அவனுக்கு வனாந்தரமாக இருக்க வேண்டும்.
8. சுகபோகம் அவனுக்கு குப்பையாக இருக்க வேண்டும்.
9. நேர்மை அவனுடன் பிறந்ததாக இருக்க வேண்டும்.
10. மாய்மாலம் அவனுக்கு அருவருப்பாக இருக்க வேண்டும்.
11. பாவம் அவனுக்கு கசப்பாக இருக்க வேண்டும்.
12. மன்னிக்கும் சுபாவம் அவனது நண்பனாக இருக்க வேண்டும்.
13. வேதவசனம் அவனது ஆகாரமாக இருக்க வேண்டும்.
14. தேவனைத் துதிப்பது அவனுக்கு பானமாக இருக்க வேண்டும்.
15. ஆவியின் அபிஷேகம் அவனது ஆடையாக இருக்க வேண்டும்.
16. பாவத்தைக் கண்டிப்பதில் அவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானாக இருக்க வேண்டும்.
17. பண ஆசை அவனுக்கு எதிரியாக இருக்க வேண்டும்.
18. ஜாதி வேற்றுமை அவனுக்கு வாந்தியாக இருக்க வேண்டும்.
19. அன்பு அவன் வாழ்வில் ஜீவ ஊற்றாக இருக்க வேண்டும்.
20. பிரசங்கத்தில் அவன் நயவசனிப்பில்லாது பவுலாக இருக்க வேண்டும்.
21. உபவாசம் அவனது உயிர்த் தோழனாய் இருக்க வேண்டும்.
22. தேவசித்தம் செய்தல் அவனுக்கு விருந்தாக இருக்க வேண்டும்.
23. வயிறு அவனது தேவனாக இருக்கக்கூடாது, போஜனப் பிரியனாய் இருந்தால் அவன் தன் தொண்டையிலே கத்தியை வைக்க வேண்டும்.
24. பரிசுத்தமே அவனது அலங்காரமாக இருக்க வேண்டும்.
25. பரலோகமே அவனது ஆஸ்தியாக இருக்க வேண்டும்.
26. அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன் என்று அறிக்கையிட வேண்டும் (பிலி. 3:11).



**தேசத்தின் எழுப்புதலுக்காக இப்படிப்பட்ட அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் தேவை!**

# 70 வது வருடாந்திர மாநாடு: ஓர் சிறப்பு பார்வை

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த ஜூலை மாதம் 10,11,12 ஆகிய தேதிகளில் மதுரையிலுள்ள நமது ஏஜி கேம்ப் சைட்டில் தமிழ் பிரதேச 70வது வருடாந்திர மாநாடு மிக சிறப்பாக நடைபெற்றது.

### முதலாம் நாள்

காலை போதகர்களுக்கான உபவாச ஜெபமும், மாலை 70வது ஆண்டு சிறப்பு கொண்டாட்ட விழாவும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. மாலை நடைபெற்ற கொண்டாட்டத்திற்கு தமிழகம் முழுவதிலிருந்தும் நமது திருச்சபை விசுவாசிகள் திரள் திரளாய் பங்குபெற்றனர். தங்க தலைவர்களின் நினைவாக நமது கேம் சைட் வளாகத்தில் பிரமாண்டமாய் கட்டப்பட்டிருந்த GOLDEN LEADERS AUDITORIUM திறப்பு விழாவோடு கொண்டாட்டம் இனிதே ஆரம்பமானது. **சகோ.வெஸ்லி மேக்ஸ்வெல்** அவர்கள் துதி ஆராதனை நடத்த, நமது தங்க தலைவர்கள் வாழ்த்து செய்திகள் வழங்கினர். அதை தொடர்ந்து சிறப்பு செய்தியாளராக அழைக்கப்பட்டிருந்த **Rev.V.T.ஆபிரகாம்** அவர்கள் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் நமது ஸ்தாபனத்தில் நீண்ட ஆண்டுகள் போதகரோடு ஊழியத்தில் உறுதுணையாக இருக்கும் போதகர் துணைவியருக்கு முதன் முறையாக இந்த ஆண்டு BIBLE WOMAN என்ற அங்கீகார சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

### இரண்டாம் நாள்

**சகோ.வெஸ்லி மேக்ஸ்வெல்** அவர்கள் சிறப்பு ஆராதனை நடத்த **Rev.V.T. ஆபிரகாம்** தேவ செய்தியளித்து ஜெபித்தார்கள். பின்னர், தமிழ் பிரதேச தலைவர்களுக்கான தேர்தல்கள் நடைபெற்றது. இந்த ஆண்டு தலைவராக **Rev.ஆபிரகாம் தாமஸ்** அவர்களும், உப தலைவராக **Rev.ஸ்டீவ் ஜெயராஜ்** அவர்களும், செயலாளராக **Rev.ஸ்டேன்லி மாணிக்கராஜ்** அவர்களும், பொருளாளராக **Rev.ஜெயபிரகாஷ்** அவர்களும், நிர்வாகக்குழு உறுப்பினராக **Rev.கிறிஸ்துதாஸ்** அவர்களும் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டனர். மாலை மிஷன் இலாகாவின் சிறப்பு நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் **Rev.ராபர்ட் ஜெயராஜ்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்பான மிஷன் சவால் செய்தியளித்தார்கள்.

### மூன்றாம் நாள்

**Rev.மெல்வின், Rev.லின்சே** அவர்கள் சிறப்பு ஆராதனை நடத்த, **Rev.ஸ்டீவ் ஜெயராஜ்** அவர்கள் தேவ செய்தியளித்து உற்சாகப்படுத்தினார்கள். பின்னர் புதிய நிர்வாகக் குழு தலைவர்களை **Rev.D.மோகன்** அவர்கள் பிரதிஷ்டை செய்து ஜெபம் ஏறெடுத்தார்கள். பின்னர் அங்கீகரிக்கப்பட்ட சபைகளுக்கான ஜெபம், கிறிஸ்தவ ஊழியர், போதக ஊழியம், போதக அபிஷேகம் நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பெயர்கள் வாசிக்கப்பட்டு ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. இறுதியாக **Rev.P.S.ராஜமணி** அவர்கள் பரிசுத்த திருவிருந்து ஆராதனையை நடத்தினார்கள். பின்னர் நன்றி கூறுதலும், இறுதி ஜெபமும் ஏறெடுக்கப்பட்டு ஆசீர்வாதம் கூறி மாநாடு இனிதே நிறைவு செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை!.

# நான் ஏன் இப்படி செய்யக்கூடாது?

**Rev. S. தாமரைச்செல்வன்**
பொருளாளர், தமிழ் பிரதேச மிஷனரி ஊழியங்கள்

## 1. நான் ஏன் இப்படி ஜெபிக்கக்கூடாது?

ஜெபிக்க அவசியமில்லாதவராகிய இயேசு கிறிஸ்துவே நமக்கு மாதிரியை, அனுபவத்தை வைத்துப்போவதற்காக அதிகாலை இருட்டோடே எழுந்து ஜெபித்தார் (மாற்கு 1:35), தனித்து ஜெபித்தார் (லூக்கா 5:16). சீஷர்கள் ஜெபித்தார் (லூக்கா 9:18). ஜெபிக்க வேண்டும் என்று பிரசங்கித்தார் (மத்.6:5-18), சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார் (லூக்கா 11:1-4). ஆத்துமாவில் நொறுங்குண்டு ஜெபித்தார் (மத்தேயு 24:36-39). சத்தமிட்டு ஜெபித்தார் (எபி.5:7). சிலுவை பாடுகளிலும் ஜெபித்தே உயிர் துறந்தார் (லூக்கா 23:26). இன்றும் தம் மூலமாய் பிதாவினிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிக் கிறார் (எபி.7:25). அப்படியானால் ஜனங்களுக்காக, பட்டணங்களுக்காக, தேசங்களுக்காக, இயேசுவின் இரகசிய வருகை வருமுன் நடைபெற வேண்டிய மீட்பிற்காக நான் ஏன் ஜெபிக்கக்கூடாது?

எனக்குத் தெரிந்த ஒரு போதகர் கிழமைகளை குறித்து வைத்து ஜெபிக்கும் பழக்கம் பற்றி கூறினார். (உம்) திங்கள் கிழமை ஊழியங்களுக்காக. தேதிகளை வரிசைப்படுத்தி ஜெபிக்கும் பழக்கத்தைப் பற்றியும் கூறினார்.(உம்). மாதத்தின் முதல் தேதி - தமிழ்நாட்டிற்காக. நேரங்களை வரிசைப்படுத்தி (காலை, மதியம், மாலை, இரவு என்று ஜெப நேரத்தை). ஜெப நாட்களை, ஜெபக்குறிப்புகளை (தலைப்புக் கொடுத்து) வரிசைப்படுத்தி ஒழுங்குபடுத்தி ஏன் ஜெபிக்கக்கூடாது?

## 2. நான் ஏன் முதலீடு செய்யக்கூடாது?

இயேசு தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ ரூபமாய் காணப்பட்டு சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:6-8), வேறுயாரும் அவரை தாழ்த்தவில்லை. தாழ்த்தும்படி சொல்லவும் இல்லை. நிர்பந்திக்கவுமில்லையே. இயேசு நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (தீத்து 2:14). தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் (ரோமர் 8:32) என்றும் வேத வாக்கியங்கள் கூறுகின்றனவே.

அவருடைய தியாகத்தை விட சிறந்த, பெரிய தியாகம் வேறெதுவும் இல்லை. அவர் செய்ததற்கு இணையாக நாம் செய்ய இயலாது. ஆயினும் நம்மை மீட்கும் தேவ திட்டத்திற்காக தியாகம் பண்ணியிருக்க நாமும் இந்த தலைமுறையைக் குறித்த தேவனுடைய திட்டத்தில் நம் பங்கை செய்வதில் அதாவது விதைப்பதில், தியாகம் அல்ல, விளைச்சலுக்காக முதலீடு செய்வதில் தீவிரம் ஏன் காட்டக்கூடாது?

மிஸோராம் மாநிலத்தில் கிறிஸ்தவ திருச்சபை மக்கள் தாங்கள் மிஷனெரிகளை அனுப்பவும் மிஷனெரிகளுக்கு மாத உதவித்தொகை அனுப்புவதற்காகவும் வாரம் ஒருமுறை தங்கள் வீடுகளிலிருந்து திருச்சபைக்கு அரிசி கொண்டு வந்து கொடுப்பார்கள். மொத்தமாக சேகரித்து அதை விற்பனை செய்து அந்த பணத்தை மிஷனெரிப் பணிகளுக்கு கொடுத்து உதவி வருகிறார்கள். அந்த மாநில பல மிஷனெரிகளை தாங்கி வருகிறது. ஏன் இப்படி நாமும் செய்யக்கூடாது?

## 3. மிஷனரி பயணம்

ஒரு முறை நமது ஸ்தாபனத்தின் ஊழியர்கள் மாநாட்டில் பீஹார் மாநிலத்தை இவ்வாண்டு மிஷனரி பணிக்காக தத்து எடுக்கிறோம் என அறிவித்தபோது பீஹார் செல்ல வேண்டும் என்று உந்துதல் ஏற்பட்டது. அப்பொழுது அதைக்குறித்து பாஸ்டர். பாப்ராஜ் (சென்னை-அப்போதைய மிஷன் பொருப்பாளர்) அவர்களிடம் பாஷை தெரியாது. யாரையும் தெரியாது.என்ன செய்வது என்று பேசியபோது நீங்கள் பீஹாரில் நமது சபையில்லாத மாவட்டத்தை தெரிந்துகொண்டு அங்கு போய் வேறே ஊழியம் செய்ய முடியாவிட்டாலும் ஜெபநடை செய்து வாருங்கள் என்று என்னிடம் அவர் சொன்னது என்னை உற்சாகப்படுத்தியது. பின்பு அதற்காக தேவனிடம் ஒரு முறையாவது அந்த மாநிலம் சென்று ஜெபநடை செய்ய வேண்டும். வாய்ப்புத் தாரும் என ஜெபித்தபோது பீஹாரில் சாரான் மாவட்டத்தில் சாப்ரா என்ற இடத்திற்கு நானும் எனது நண்பர் பாஸ்டர்.சாமுவேல் பாண்டியனும் தன் சபை விசுவாசி ஒருவரும் இணைந்து போய் சாப்ரா இரயில் நிலையத்தில் ஓய்வறையில் மூன்று நாட்கள் தங்கி பஸ் நிலையத்திலிருந்து பிரிந்துபோகும் எல்லா திசை சாலைகளிலும் ஜெபநடை செய்தபோது சபை ஆரம்பிக்க கர்த்தர் வழி திறந்தார். இரண்டு வருடம் உதவிகள் அனுப்பி மறுபடியும் போய் சந்தித்த போது அங்குள்ள சபைப் போதகரின் வழி நடத்தலின்படி புதுகிளை சபை ஊழியம் ஆரம்பிக்க தேவன் உதவினார். இன்றும் சபை ஊழியங்கள் நடைபெற்று வருகிறது. இன்று வரை பல மாநிலங்களில் மிஷனெரி பிரயாணம் சென்று ஊழியஞ்செய்து வர முடிகிறது. வாஞ்சித்தால் தேவன் வாய்ப்புகளைத் தருவார்.

## 4. மரிப்பதற்கு முன்....

என் வாழ்க்கையில் ஒருநாள் நான் மரிப்பதற்கு முன் எதையெல்லாம் செய்ய வேண்டும் என்று சிந்தனை வந்தபோது உலகில் பலர் தன் மனைவிக்காக, தன் பிள்ளைகளுக்காக இடம், வீடு, படிப்பு, திருமணம் போன்றவைகளை ஒழுங்குபடுத்தி திருப்தியடைகிறார்கள். நல்லதுதான், தேவை தான், தவறு இல்லை. ஆனாலும் தேவனுக்காக, தேவனுடைய ராஜ்ய விரிவாக்கத்திற்காக, பின்வரும் தலைமுறையினரின் மீட்பிற்காக எதை செய்திருக்கிறோம்? எதை செய்ய வாஞ்சிக்கிறோம்? என்ற கேள்வி வந்தது. அப்பொழுது எனக்குள் மரிப்பதற்குள் நமது வேதாகமம் இதுவரை மொழிபெயர்க்கப்படாத மொழிகளில் ஒன்றுக்காவது மொழிபெயர்க்க ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றியது. தீர்மானித்தேன். வாஞ்சித்தேன். ஜெபிக்க ஆரம்பித்தேன். ஒருமுறை மிஸோரோம் மாநிலத்திற்கு மிஷனெரி பயணம் செய்தபோது அங்கு மொழிபெயர்ப்பு ஊழிய பயிற்சியில் ஈடுபடும் ஒருவரை சந்திக்க நேர்ந்தது. அவருடைய ஊழியத்தை விசாரித்து அறிந்தபோது "மட்டு" என்கிற மொழியில் இதுவரை எந்தவிதமான புத்தக வடிவில் வேதாகமமோ அல்லது ஒரு பகுதியோ இல்லை. கிறிஸ்தவ பாடப்புத்தகம் கூட இல்லை. தற்போது பாடப்புத்தகம் டைப் செய்து வைத்துள்ளேன். ஆனால் பிரிண்ட் செய்ய பண வசதி இல்லை என்றார். அது என் உள்ளத்தை உலுக்கியது. நான் உடனே அந்த மொழியில் டைப் செய்ததை எனக்கு அனுப்புங்கள், புத்தகமாக்கி அனுப்புகிறேன் எனறு கூறி அதை "மட்டு" என்ற மொழியில் முதல் கிறிஸ்தவ பாடப்புத்தகம் வெளியிட தேவன் கிருபை பாராட்டினார். நாம் வாஞ்சித்தால் தேவன் வாய்க்கப்பண்ணுவார். மரிப்பதற்கு முன் ஒரு ஊழியத்திற்கு ஏன் இடம் வாங்கி தரக்கூடாது? ஏன் ஒரு ஆலயம் கட்டிக்கொடுக்கக் கூடாது? பின்வரும் சந்ததிக்கு ஏன் ஒரு உயிரோட்டமான காரியம் செய்து வைக்கக்கூடாது?

இதுவரை சந்திக்கப்படாத மக்கள் நடுவில் இதுவரை இயேசுவை அறியாதவர்கள் நடுவில் இதுவரை கேள்விப்படாதவர்கள் நடுவில் ஜனங்களை இயேசுவின் அன்பிற்குள் வழி நடத்துவதே "மிஷனெரி பணியாகும்". இதற்காக ஜெபிக்கவும் முதலீடு செய்யவும் கிரயம் கொடுத்து உழைக்கவும் நீங்கள் ஏன் இப்படி செய்யக்கூடாது?

நீங்களும் நல்ல தீர்மானத்தோடு கொஞ்சமாய் ஆரம்பித்து உறுதியாயிருந்து படிப்படியாக முன்னேறுங்களேன். நீங்களும் ஏன் இவைகளைச் செய்யக்கூடாது?

# உப்பு பேசுகிறேன்



அன்பானவர்களே!

மலை பிரசங்கத்தில் ஆண்டவராகிய இயேசு குறிப்பிட்ட உப்பு நானே. இறைமக்கள் அனைவரும் என்னைப்போல் இருக்கவேண்டுமென்றே அவர் விரும்பினார். ஏன் என்று கேட்கிறீர்களா? நான் பேசுவதை இங்கே நன்றாக கவனியுங்கள்.

### 1. இரட்சிப்படைதல் (Salvation)

கடலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவன் நான். கடலிலிருக்கின்ற வரை என்னை யார் மதிக்கிறார்? நான் பயனற்றவன். எதையாவது சமைப்பதற்கு யாராவது கடல் நீரை உபயோகிப்பார்களோ? உப்பளங்களில் என்னைத் தேக்கிவைத்து சூரிய ஒளியில் பதப்படுத்திச், சுவை தரும் உப்பாக மாற்றுகிறார்கள். அவ்வண்ணமே, நீங்களும் உலகத்தாராய் இருக்கும் வரை தேவனுக்கென்று பயன்பட முடியாது. "நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டேன்" என்றார் இயேசு (யோவான் 15:19). தொலைந்துபோனவர்களாய் உலகில் காணப்பட்ட உங்கள்மீது நீதியின் சூரியனை உதிக்கச்செய்து, உலகக் கடலிலிருந்து வேறுபிரித்து, உப்பாக உங்களை மாற்றியவர் அவரே (2கொரி. 4:6). ஆகவேதான் "சபை" என்று நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். கிரேக்கமொழியில் சபை என்னும் சொல்லைக் குறிக்கும் ''எக்ளீஷியா'' என்ற பதம் ''தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்'' அல்லது "பிரித்தெடுக்கப்பட்டவர்கள்" என்றே பொருள்படுகிறது.

இந்நாட்களில், பிரித்தெடுக்கப்படுதல் என்ற சொல் சரியான விதத்தில் விளங்கிக்கொள்ளப்பட வேண்டும். உலகத்திற்கும் சபைக்கும் இடையே உள்ள வேறுபிரிக்கும் கோடு தனி நபர்களின் வசதிக்கேற்றாற்போல் சில நேரங்களில் மாற்றப்படுகிறது. மாறாக, வேத அடிப்படையில், தேவனின் அளவீடுகளின்படி இந்த வேறுபிரிக்கும் நிலை நிர்ணயிக்கப்படவேண்டும். தேவபிள்ளையே, இவ்வேறுபாட்டை விளங்கிக்கொண்டாயா? உன்னை உப்பாக மாற்றிய அவருக்கு உண்மையாயிருக்கிறாயா?

### 2. பரிசுத்தமாகுதல் (Sanctification)

அழுக்கில்லாமல் பளிச்சென்று வெண்மையாக இருந்தால்தானே என்னை மக்கள் உபயோகிக்கிறார்கள்.. அதற்கு நான் படும்பாடு என்ன தெரியுமா? தொழிற்சாலையில் என்னைத் தூய்மைப்படுத்த ஒரு நீண்ட வழிமுறையே உள்ளது - வேகவைத்து, உலர்த்திக் கறை நீக்கி, வெண்மையாக்கி, மினுமினுப்புப் பெறுகிறேன். சூரிய ஒளியில் எவ்வளவுக்கதிகமாய்க் காய்கிறேனோ அவ்வளவுக்கதிகமாய் ஒளிர்கிறேன். தூய்மையின் அடையாளம் வெண்மை (வெளி.7:14, 1யோ.1:7). தூய்மையாக வாழும்போதுதான் மக்கள் உங்களை விரும்புகின்றார்கள். ஆகவே உங்களைப் பரிசுத்தமாக்கும்படித் தம்முடைய பிதாவினிடத்தில் இயேசு மன்றாடினார் (யோ.17:8,19). மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக நீங்கள் விளங்க வேண்டுமென்றால், பரிசுத்தமாகுதலின் குகையில் நீங்கள் புடமிடப்பட வேண்டும். நீதியின் சூரியன் உங்கள் மீது வீச வீச நீங்கள் ஒளிமயமாவீர்கள் (சங். 34:5).

### 3. சேவை புரிதல் (Service)

சேவை செய்யவே நான் பிறந்தேன். இவ்வுலகில் இதைத் தவிர வேறு நோக்கம் எனக்கில்லை. என் தொடர்பில் வருகின்ற எதையும் நான் சாரமுள்ளதாக்குகின்றேன், மாற்றத்தை விளைவிக்கின்றேன், சுவையான மாறுதலை அதில் பரிணமிக்கச் செய்கின்றேன். உங்கள் வாழ்வின் நோக்கம் என்னவென்று தெரியுமா? உங்களை ஒப்பற்ற உப்பாக மாற்றிய தேவனுக்கு சேவை செய்தலே. அவருடைய பார்வையில் நீங்கள் விலையேறப்பெற்ற சரக்கு! என்னைப் போலவே, உங்கள் தொடர்பில் வருகின்ற எவருடைய வாழ்விலும் மாற்றத்தை ஒளிரச்செய்ய உங்களால் இயலும். மக்களைக், குடும்பங்களை, சூழ்நிலைகளை - அனைத்தையுமே நீங்கள் மாற்ற முடியும்.

### 4.தியாகம் செய்தல் (Sacrifice)

''நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்'' ''நீங்கள் உலகிற்கு ஒளியாயிருக்கிறீர்கள்" என்று அடுத்தடுத்து ஆண்டவர் சொன்னதில் அர்த்தம் உள்ளது. உப்பு, ஒளி இரண்டுமே மக்களுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதம். இரண்டும் ஒரு தன்மையைப் பொதுவாகப் பெற்றுள்ளன. அது வேறொன்றுமில்லை - தியாகமே. ஒரு மெழுகுவர்த்தி ஒளிதரும் வேளையில் தன்னைக் கரைத்து உருக்குகிறது. அவ்வாறே, உணவுப் பண்டங்களில் நான் கலக்கப்படும்போதும் கரைந்தேபோகிறேன்! பழைய ஏற்பாட்டில் தகனபலிமீது உப்பு தூவப்பட்டது. உப்பில்லாத பலி இல்லை (எசேக்.43:24; மாற்கு 9:49). தியாகமில்லாமல் தேவனுக்குச் சேவை செய்வது கூடாத காரியம். தியாகம் செய்ய எந்த அளவுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களோ அந்த அளவுக்குத் தேவன் உங்களைப் பயன்படுத்துவார்.

தியாகத்தைக் குறித்து மத்தேயு 16:24,26 வசனங்களில் இயேசு கூறுகின்றார். இவ்வசனங்களுக்கு முந்திய பகுதியில்-கட்டுவதற்கும், கட்டவிழ்ப்பதற்கும் அவசியமான வல்லமையைக் குறித்து அவர் குறிப்பிடுகின்றார் (வச.19). இதன் பொருள் என்ன? வல்லமையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமெனில் ஏதோ ஒன்றைத் தியாகம் செய்துதான் ஆகவேண்டும்.

### 5. பாதுகாப்புத் தருதல் (Security)

பொருட்கள் கெடாமலும், அழுகாமலும் காக்கப்பட, உப்பாகிய நான் பயன்படுத்தப்படுகின்றேன். எலுமிச்சைப்பழத்தை நீங்கள் வெட்டித் துண்டுகளை அப்படியே வைத்துவிட்டால் அவை அழுகிவிடும். ஆனால் அவைகளில் உப்புக் கலந்து வைத்தால், ஆகா! ருசியான ஊறுகாயாக மாறிவிடும். விலங்கின தோலை எடுத்து அப்படியே விட்டுவிட்டால் நாற்றம் சகிக்காது. ஆனால் என்னை அதன்மீது தடவி வைக்கும்போது, உங்கள் கைப்பைக்கும் இடைக்கச்சைக்கும் பயன்படும் மினு மினுப்பான பொருளாய் மாறுவேன். அவ்வாறே அழிந்து கொண்டிருக்கும் இவ்வுலகை நீங்களும் அழியாமல் காக்கவேண்டும்.

### 6. சாரம் நிறைந்திருத்தல் (Savour)

சாரத்தை இழந்துவிடும் அபாயம் எப்பொழுதுமே எனக்கு உண்டு. என்னை ஒரு தட்டில் வையுங்கள். என்ன நடக்கிறது? காற்றிலிருந்து ஈரப்பசையை உறிஞ்சுகின்றேன். சிறிது நேரத்தில் நீர்நிலைக்கு வந்து விடுகின்றேன். எந்தத் தண்ணீரிலிருந்து வேறு பிரிக்கப்பட்டேனோ அந்தத் தண்ணீரே, நான் திறந்து வைக்கப்படும்போது எனக்கு எதிரி ஆகிவிடுகின்றது. ஆகவே தான், "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று இயேசு சொன்ன உடனேயே, "உப்பானது சாரமற்றுப்

போனால் எதினால் சாரமாக்கப்படும்?" என்று வினவினார். உங்களுக்கும் இதுதானே பிரச்சனை? எந்த உலகிலிருந்து நீங்கள் பிரித்தெடுக்கப்பட்டீர்களோ, அதே உலகு உங்கள் நீதியின் சாரத்தை இழக்கச் செய்யும் எதிரியாக உங்களை அச்சுறுத்துகிறது.

தேவ நீதியே உங்கள் சாரம். அதைப் பேணிக்காக்கவேண்டிய பெரும்பொறுப்பு உங்களுக்கு உண்டு. இஸ்ரவேல் மக்களை எண்ணிப்பாருங்கள். எகிப்தை விட்டு அவர்கள் வெளியே கொண்டுவரப்பட்டிருந்தாலும், அவர்கள் உள்ளத்திலிருந்து எகிப்தை வெளியே கொண்டுவர இயலவில்லை. எகிப்தின் நினைவுகள் அவர்களை அவ்வப்போது பின்னோக்கி இழுத்தது. உங்கள் பழைய பாவமும், சுபாவமும் உங்களை இன்னும் நச்சரிக்கிறதா? பின்னோக்கி இழுக்கிறதா? கவலைப்படாதிருங்கள். நீங்கள் உலகத்திலிருந்தாலும் உலகம் உங்களை மேற்கொள்ளாது (1 யோ. 4:4). இயேசு உங்களுக்குள் வாழும் வரை நீங்கள் சாரம் இழக்கமாட்டீர்கள்.

### 7.பொதுவாயிருத்தல் (Sociable)

நல்லது, என் முழுப்பெயர் என்ன தெரியுமா? - "பொதுவான உப்பு" (Common Salt). அனைத்துலகிற்கும், அனைத்து மக்களுக்கும் நான் பொதுவானவன். ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு எனக்கில்லை. ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; ஞானியென்றும் மூடனென்றும் இல்லை; குலத்தில் உயர்வு, தாழ்வு இல்லை. யாவருக்கும் நான் சொந்தக்காரன். செல்வச் சீமான் அழகிய பீங்கான் கோப்பையில் என்னை வைக்கின்றான், எளியவனோ ஒரு மண் பாண்டத்தில் என்னை வைக்கின்றான். அவ்வளவுதான் வேறுபாடு. அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுவதுபோல நான் எல்லாருக்கும் எல்லாமானவன் (1கொரி.9:19,22). உலகமே என் சொந்தம். ஒவ்வொரு கோத்திரம், ஒவ்வொரு மொழி சார்ந்த அனைவருக்கும் நான் பொதுச்சொத்து. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்!" இவ்வாறு அனைவரும் அணுகி அனுபவிக்கக்கூடிய நபராக நீங்கள் இருக்கிறீர்களா? எந்த நபருக்கும் எந்த வேளையிலும் எந்த இடத்திலும் எந்த வகையிலும் சேவை புரிய நீங்கள் ஆயத்தமா?

சமாதானத்துக்கு அடையாளமாக மக்கள் என்னைப் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். தங்களுக்கிடையே அமைதியை நிலைநாட்டிட நாடுகள் "உப்பு ஒப்பந்தம்" நிறைவேற்றுகின்றன. "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்றார் இயேசு (மத்தேயு 5:9). "உங்களுக்குள்ளே உப்புடையவர்களாய் இருங்கள், ஒருவரோடொருவர் சமாதானம் உடையவர்களாய் இருங்கள்" என்றும் அவர் கூறினார். (மாற்கு 9:50).

பொறுமையுடன் கேட்டமைக்கு நன்றி - உப்பு.

- நன்றி : ஆசீர்வாதம்

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர், பரிபூரண ஜீவன்,
43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17
செல் : 94434 15484



# 4G CONNECTIVITY FOR THE BETTERMENT OF YOUNG LIVES

Rev. லின்ஸி ஜோன்ஸ் (President, CA)

வாலிபர்களை நடத்தும் ஊழியர்களாய், வாலிப தலைவர்களாய், வாலிப பிள்ளைகளின் பெற்றோர்களாய் நாம் அவர்கள் வாழ்வில் இனம் கண்டு வளர்க்கக்கூடிய நான்கு விதமான காரியங்களைக் குறித்து இந்த பகுதியில் எழுத விரும்புகிறேன். தன் வாலிப குமாரனாகிய தீமோத்தேயுவின் வாழ்வில் ஆவிக்குரிய தந்தையாக பவுல் அப்போஸ்தலன் இதை அடையாளம் கண்டு கொள்வதையும், உற்சாகப்படுத்துவதையும் அதன் மூலம் ஒரு சராசரி வாலிபன் தீமோத்தேயுவை, ஒரு தலைமுறை முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தும் அற்புத ஊழியனாய் மாற்றுவதை காணமுடியும்.

## 1.Godly Love : தெய்வீக அன்பு

1 தீமோ.1:5-ன் படி, இந்த அன்பு வாலிப வாழ்வில் அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியம். இன்றைய உலகம் அன்பு என்ற பதத்தை தவறான விதத்தில் பயன்படுத்துகிறது. ஆனால் நாமோ இவ்வன்பை உணரப்பண்ணுவோமானால், தேவன் இவர்களை பயன்படுத்துவதை நாம் காண இயலும். இவ்வன்பு பின்வரும் மூன்று காரியங்களை மூலமாக உருவாகிறது.

| | |
|---|---|
| 1. சுத்தமான இருதயம் | Pure heart |
| 2. நல்மனசாட்சி | Clear conscience |
| 3. மாயமற்ற விசுவாசம் | Genuine faith |

தீமோத்தேயு அதை அறிந்து கொண்டு அதில் வளரவும் மற்றவர்களுக்கு அதை வெளிப்படுத்தவும் பவுல் மேற்கொண்ட மூன்று காரியங்களை உணர்த்துவதை காணமுடியும்.

## 2.Gallant Words : கம்பீரமான வார்த்தைகள்

1 தீமோ.1:18-ல் தீமோத்தேயுவுக்கு பவுல் அவனைக் குறித்து சொல்லப்பட்ட தேவ வார்த்தைகளை தரிசனங்ளை நினைப்பூட்டுகிற வார்த்தைகளை காண முடியும். ஒரு வாலிபனை உருவாக்கவும் அநேகருக்கு உபயோகமானவனாய் மாற்றவும, அவர்களைக் குறித்த தேவ திட்டத்தையும் தரிசனத்தையும் நினைப்பூட்டும் வார்த்தைகளை பேசுவது மிகவும் அவசியமாகும். இவ்வார்த்தைகள் தேவனிடமிருந்து வருவதால் அவர்களை உயிர்ப்பித்து நல்ல போராட்டம் போராடும்படியும் தேவனற்ற உலக சூழலில் தேவனை வெளிப்படுத்தவும் தேவ தரிசனத்தை நிறைவேற்றவும் உதவும்

## 3. Guarding Attitude: காத்துக்கொள்ளும் மனோபாவம்

1 தீமோ.4:12 வசனத்தின்படி பவுல் தீமோத்தேயுவுக்கு சிலவற்றை காத்துக்கொள்ளும்படி அறிவுறுத்துகிறான். இன்றைய இணையதள கலாச்சாரம் மனிதன் எதையுமே காத்துக்கொள்ளாத மனோபாவத்தை வெளிப்படுத்துகிறது.

ஆனால், நமது வாலிபர்கள் பின்வரும் காரியங்களை காத்துக்கொள்ளும்படி நாம் அறிவுத்த வேண்டிய அவசியம்.

| | |
|---|---|
| 1. இளமையை குறித்து | About their youth |
| 2. வார்த்தையை குறித்து | About their speech |
| 3. நடக்கையை குறித்து | About their conduct |
| 4. அன்பை குறித்து | About their love |
| 5. விசுவாசத்தைக் குறித்து | About their faith |
| 6. கற்பை குறித்து | About their purity |

தீமோத்தேயுவைப் போல வாலிபர்கள் தைரியமாய் அநேகருக்கு போதிக்கும்படி தேறினவர்களாய் மாற வேண்டுமானால், மேற்கூறியவைகளை காத்துக்கொள்ளும்படி கற்பிக்கப்பட வேண்டிய அவசியம்

## 4.Growing Life : வளரும்/தேறும் வாழ்வு

1 தீமோ. 4:15-ல் பவுல், தீமோத்தேயு தேறும் நிலைக்கு மாறும்படி அறிவுறுத்துவதை காணமுடியும். வாலிபர்கள் தேறுவது மேற்கூறிய காரியங்களின் படி சாத்தியமே. ஆனால் பவுல் தேறும் நிலையை கூறும்போது அதோடு நிறுத்திவிடாமல், அதில் நிலைத்திருக்கும்படியும் அறிவுறுத்துகிறார். அதில் தேறும் நிலைக்கும், நிலைத்திருக்கும் நிலைக்கும் இடையில் அதை சாத்தியப்படுத்தும் ஒன்றாக அதை சிந்திக்கும் நிலையை குறிப்பிடுவதை காணமுடியும். சிந்தித்தல் என்றால் நினைப்பதோ எண்ணுவதோ அல்ல மாறாக தேறினவாய் இருக்கும்படி உள்ளத்தில் எடுக்கும் உறுதியான தீர்மானமே ஆகும். Thinking doesn't mean having something in mind rather having a determination in mind."

இன்றைய காலகட்டத்தில் வேகமாக தொடர்பு கொள்ளவும், தகவல் பரிமாறவும், 4G அவசியம். நம் வாலிபர்களும் தேவனுக்காய் துரிதமாய் செயல்பட இந்த 4G க்கு நேராய் அவர்களை திருப்புவோமானால் நம் இளைய சமுதாயம் தேவசித்தத்தில் வேகமாய் வளர்ந்து பெருகும் என்பதில் துளியும் சந்தேகமில்லை. நாம் பவுல்களாய் வாலிபர்களை கவனிப்போமானால் தேவன் பல தீமோத்தேயுக்களை நம் மூலமாய் உருவாக்குவார் என்பது நிச்சயம், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக

---

**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும்**
**உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102

## சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ




**பெ. பெவிஸ்டன்**

பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்


ஹாய் குட்டீஸ்.... வெல்கம் டு ஆல்... எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? கடந்த மாத இதழ் குறித்து உங்களில் அனேகர் கூறிய மேலான கருத்துக்களை எண்ணி தேவனை துதிக்கிறேன். இந்த முறையும் உங்களுக்காக ஒரு சூப்பரான கதை சொல்லப் போகிறேன். வாங்க கதையை கேட்கலாம்.

பள்ளி மைதானத்தில் மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ஆசிரியர் ராஜன் அந்தப் பக்கமாக வந்தார். அவர் ஒரு மாற்றுத் திறனாளி. அவர் தூரமாக வரும்போதே, மாணவன் சுரேஷ், டேய்... அங்க பாருங்கடா யார் வர்றதுன்னு' என்று கூறிவிட்டு காலில் ஊனம் இருப்பதுபோல் நடந்து காட்டினான். மற்ற மாணவர்கள் எல்லோரும் சிரித்தனர். ஆசிரியரோ கண்டும் காணாமல் சென்றுவிட்டார். இது வழக்கமாக நடந்து வந்தது.

வீட்டில் ஒரு பையன் என்பதால் சுரேஷிற்கு செல்லம் அதிகம். அதனால் அதிகமாக குறும்புகள் செய்வான். பெற்றோரின் கண்டிப்புக்கு அவன் ஒரு நாளும் பயப்படுவதில்லை. விளையாட்டுப் பிள்ளையாக இருந்தாலும் சுரேஷ் நன்றாகப் படிப்பான். பள்ளி முடித்து கல்லூரிக்குச் சென்ற பின்னும் அவனது கலாட்டா குறையவில்லை.

ஒருநாள் கல்லூரிக்குச் சென்று திரும்பிய சுரேஷ், படுக்கைக்குப் சென்று அசதியில் தூங்கியவன் மறுநாள் எழுந்திருக்க முடியவில்லை. உடலில் ஜீரம் கொதித்தது. உடனே மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தனர். பக்கவாதம் தாக்கியிருப்பதாக டாக்டர்கள் கூறினர். இறுதியில் ஒரு கால் நடக்க முடியாமல் போய்விட்டது. அதனால் கல்லூரிக்குச் செல்ல வெட்கப்பட்டுக் கொண்டு சுரேஷ் வீட்டிலேயே முடங்கிவிட்டான். "ஆசிரியரை நாம் எப்படியெல்லாம் கேலி செய்தோம். அதற்குச் சரியான தண்டனைதான்" என்று எண்ணிக் கொண்டான். சுரேஷ் நிலையைப் பற்றிக் கேள்விப்பட்ட ஆசிரியர் ராஜன், சுரேஷைப் பார்க்க வீட்டிற்கு வந்தார். படுக்கையில் கிடந்த சுரேஷைப் பார்த்து பேசினார். "சுரேஷ், நீ எப்படி துருதுருன்னு விளையாடிக்கொண்டு இருப்பாய். இப்போ இப்படி முடங்கிவிட்டாயே. பள்ளியில் படிக்கும்போது நீதான் என்னைக் கேலி செய்யும் மாணவன் என்பது எனக்குத் தெரியும். அது அறியாப் பருவம். எனக்கு உன்மேல் கோபம் கிடையாது.

ஆனால் நீ இப்படி முடங்கிப் கிடப்பதுதான் வருத்தமாக இருக்கிறது. உடல் ஊனம் ஒரு குறையே அல்ல. மனசு ஊனம் அடைந்தால் தான் ஆபத்து, எனக்கும் உன்போலதான் திடீரென்று இப்படியானது. இதோபார் நான் உன் முன் ஆசிரியராக நிற்கிறேன். உன்னாலும் முடியும். முதலில் நீ வெட்கப்படுவதை விட்டுவிட்டு கல்லூரிக்குச் சென்று படி, மற்றதை பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்றார்".

நாம் இவரை எவ்வளவோ கேலி செய்திருக்கிறோம். ஆனால் அவர் நம்மை ஊக்கப்படுத்திவிட்டு செல்கிறாரே என்று எண்ணியவன். ஆசிரியர் ராஜனை தன் குருவாக ஏற்றுக்கொண்டு அவரது அறிவுரைப்படி கல்லூரிக்குச் சென்றான். கல்லூரி படிப்புக்குப் பின் ஆசிரியர் படிப்பையும் முடித்தான்.

ஆனால் உடனே வேலை கிடைக்கவில்லை. சிறிது காலம். டியூஷன் சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருந்தான். ஆசிரியர் ராஜன், தன் பதவிகாலம் முடிந்ததும் தனது வேலையை சுரேஷிற்கு கொடுக்குமாறு அதிகாரிகளிடம் பரிந்துரைத்து அவ்வேலையை வாங்கிக் கொடுத்தார். இப்போது சுரேஷ் அதே பள்ளியில் ஆசிரியராக வேலையில் சேர்ந்தான். "ஆசிரியரை கேலி செய்த நினைவுகளும், அவரே குருவாக மாறிப்போன நினைவுகளும் அவன் நெஞ்சில் அவ்வப்போது வந்து போகும். ஆனால் இப்போது யாரையும் விளையாட்டுக்குக் கூட கேலி செய்வதில்லை".

அன்பு தம்பி, தங்காய்... நாம் கேலி, கிண்டல் என்ற பெயரில் நம்மை சுற்றியுள்ள எத்தனைபேரை காயப்படுத்தியிருக்கிறோம். யோசித்துப் பாருங்கள். கேலி, கிண்டல் இந்த வயதில் இயற்கையானதுதான். ஆனால் ஒரு குறிப்பிட்ட நபரை காயப்படுத்தி நாம் மகிழ்ச்சியாயிருப்பது நியாயமல்ல. வீண் புகழ்ச்சியை விரும்பாமலும் ஒருவரையொருவர் கோபமூட்டாமலும் ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம். ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (கலா. 5:26;பிலி.2:3) என்ற வேத வசனங்களை மனதில் நிறுத்தி அதை நிறைவேற்ற பிரயாசப்படுங்கள்.

இந்த கதை பிரயோஜனமாயிருந்திருக்கும் என எண்ணுகிறேன். உங்களது தீர்மானங்களையும், கருத்துக்களையும் 97503 81784 எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் சந்திப்போம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

தொடர்ச்சி...

13. உங்கள் பிள்ளைகள், வீட்டிற்கு செய்யும் உதவிகளிலும் வேலைகளிலும் ஏனோதானோ வென்று இருக்கிறார்களா?

14. உலகப் பிரகாரமாக வளர்க்கப்படும் பிள்ளைகள் வீட்டிற்கு வந்து விடும் நேரத்தை காட்டிலும் உங்கள் பிள்ளைகள் தாமதமாக வர அனுமதிக்கிறீர்களா?

15. உங்கள் பிள்ளையின் வார்த்தையை நம்ப முடியவில்லையென்று உணருகிறீர்களா?

16. கிறிஸ்தவ ஐக்கியம் மற்றும் நடவடிக்கைகளைத் தவிர்த்து பிற கிறிஸ்தவரல்லாத நண்பர்கள் மற்றும் சபை சார்பற்ற நடவடிக்கைகளில் உங்கள் பிள்ளை நாட்டங் கொள்கிறானா?

17. வீட்டிற்கு வெளியே எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ள உங்கள் பிள்ளை துணிவு கொள்ளும்போது, ஆசிரியர் போலிஸ் அதிகாரி, முதலாளி ஆகியோர் அவனை தண்டிக்கையில், அவர்கள்தான் உங்கள் பிள்ளையை தவறாக நடத்துகின்றனர் என எண்ணங்கொள்கிறீர்களா?

18. வேதம் கூறும் தகுதியான உடையலங்காரத்திற்கான வரையறைகளை மீறி ஆடைகளைத் தெரிவு செய்ய உங்கள் பிள்ளையை அனுமதிக்கிறீர்களா?

இக்கேள்விகளில் சிலவற்றுக்கு நீங்கள் "ஆம்" என்று பதிலளிக்க வேண்டியிருந்தால், காரியங்களைத் திருத்திக் கொள்ள தேவனிடம் மன்றாடுங்கள்.

---

# பெற்றோர்களே, எச்சரிக்கை!



நம்மில் அநேகர் கிறிஸ்தவ பெற்றோர்களாய் நமது பொறுப்பில் தவறுவது, வேண்டுமென்றே அப்படி தவறிப் போக தெரிந்து கொள்வதால் அல்ல, அநேக அலுவல்களில் சிக்கிக்கொண்டு அக்கறையற்றவர்களாய் மாறிவிட்டதால் தான், நம்முடைய பிள்ளை வளர்ப்பில் ஏதோ தவறு இருக்கிறது என்று சுட்டிக்காட்டும் எச்சரிக்கைகளை நாம் காணத் தவறியதால் தான்.

## கீழ்க்காணும் பதினெட்டு எச்சரிக்கை குறிப்புகளை திறந்த மனதோடு ஆராய்ந்து பாருங்கள்

1. உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஒருமுறைக்குமேல் சொல்ல வேண்டியிருக்கிறதா (அ) தூங்க செல்வதற்கு (ஆ) சபையில் அமைதியாயிருக்க (இ) அழுகையை நிறுத்த (ஈ) ஒரு வேலையை முடிக்க?
2. நீங்களோ அல்லது வேறொரு பெரியவரோ பேசும்போது உடனடியாகவும், மரியாதையுடனும் பதில் கூற உங்கள் பிள்ளை தவறுகிறதா?
3. எப்படியாகிலும் சில சமயங்களில் கீழ்ப்படியாமல் காரியம் சாதித்து விடலாம் என்று உங்கள் பிள்ளை நினைக்கிறதா?
4. "மன்னித்து விடுங்கள் நான் தவறு செய்து விட்டேன்" என்று உங்கள் பிள்ளை சொல்ல நீங்கள் கற்பிக்க தவறி விட்டீர்களா?
5. தன்னுடைய வழியில் செல்ல அனுமதிக்கப்படாத போது பிடிவாதமான, விடாப்பிடியான மௌனத்தில் தனித்துச் செல்வதை தடுக்க தவறி விட்டீர்களா?
6. பிறரது உரிமைகளுக்கும், உடைமைகளுக்கும் மதிப்புக் கொடுக்கும் குணத்தை உங்கள் பிள்ளைகளிடம் உருவாக்க தவறி விட்டீர்களா?
7. என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் கூறும் போது... உங்கள் பிள்ளை அதை எதிர்த்து வாதாட அனுமதிக்கிறீர்களா?
8. இயல்பாகவே உங்கள் குழந்தை எதற்கெடுத்தாலும் சிணுங்கிக் கொண்டே, குறை கூறிக் கொண்டே இருக்கிறதா?
9. வீட்டில் இருப்பதைக் காட்டிலும் மற்ற எல்லா இடங்களிலும் இருப்பதை உங்கள் பிள்ளை அதிகம் விரும்புகிறதா?
10. நீங்கள் முக்கியமாக கருதுகிற காரியங்களைக் குறித்து உங்கள் பிள்ளை எள்ளி நகையாடுகிறதா?
11. உங்கள் பிள்ளை தன்னுடைய கனவுகளையும், திட்டங்களையும் உங்களிடம் எப்பொழுதாவது பகிர்ந்து கொள்கிறதா, அல்லது ஒருபோதும் அப்படி கலந்துரையாடுவது இல்லையா?
12. வாலிபப் பருவத்தில் உள்ள உங்கள் பிள்ளை உங்களது மதிப்பீடுகளுக்கு அக்கறையற்றவனாய் எல்லா தெரிவுகளையும் தானே செய்கிறானா?

32-ம் பக்கத்தில் தொடர்கிறது



# சமயத்திற்கேற்ற வார்த்தை


## Rev. I. அலெக்ஸாண்டர்

விஷன் 2020 ஜெப ஒருங்கிணைப்பாளர்


ஏசாயா 50:4-ல் “இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக் கொள்ளுகிறவர்களைப்போல, நான் கேட்கும்படி என் செவியை கவனிக்கச் செய்கிறார்” என்று வாசிக்கிறோம். பிசாசு இயேசுவை சோதித்தபோது, “மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்” (லூக்கா 4:4). மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும் (நீதி.18:21).

யோவான் 7:46-ல் சேவகர்கள் பிரதான ஆசாரியரிடத்தில் இயேசுவைப் பற்றிக்கூறும்போது அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்று சாட்சி கொடுத்தார்கள். நாம் கற்றதுபோல இயேசு கற்கவில்லை. ஆயினும் வேத எழுத்துக்களை நன்றாக அறிந்திருந்தார். அவருடைய வார்த்தைகள் உப்பினால் சாரமேற்றப்பட்டதாயும், கிருபை பொருந்தினதாயும் இருந்தது.

என்ன பேச வேண்டும்? எப்பொழுது பேச வேண்டும்? எப்படிப் பேச வேண்டும் என்பது மிகவும் முக்கியம். உற்சாகப்படுத்தும் வார்த்தைகளாயினும் அவை சரியான தொனியில் சொல்ல வேண்டும். இல்லையேல் அவை அதைரியத்தையும், கசப்பையுமே உண்டாக்கும். பட்டயக்குத்துகளைபோல் பேசுகிறவர்களும் உண்டு; ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம் (நீதி.12:18).

இயேசுவைக் கவனித்துப் பாருங்கள். யோவான் 4-ஆம் அதிகாரத்தில் சமாரியா ஸ்திரீயோடுள்ள சம்பாஷனையில் தாகத்துக்குத் தண்ணீர் கேட்டு, அவள் தாகத்துக்குத் தண்ணீர் தா என்று என்னிடத்தில் எப்படிக் கேட்கலாம் என்றபோது, உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதை அறிந்திருந்தால் நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய். அவர் உனக்கு ஜீவதண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றபோது - அந்தத் தண்ணீர் எனக்குத் தரவேண்டும் என்றாள். உடனே இயேசு அவளை நோக்கி உன் புருஷனை இங்கே அழைத்துக்கொண்டு வா என்றார். அந்த ஸ்திரீ எனக்கு புருஷன் இல்லை என்றபோது இயேசு அவளை கண்டனம் பண்ணவோ குற்றப்படுத்துவோ இல்லை. இயேசுவின் பதில் மிகவும் ஞானமுள்ளதாயிருந்தது. யோவான் 4:17-ல் நீர் சொன்னது சரிதான். நீர் தீர்க்கதரிசி என்றாள். ஒருவேளை இயேசு, யாரிடத்தில் மறைக்கப் பார்க்கிறாய்? நான் ஒரு தீர்க்கதரிசி! உனக்கு ஐந்து புருஷர்கள் இருந்தார்கள். உன் நிலை எல்லாம் தெரியுமென்று கடினமாக பேசியிருந்தால் அவள் இயேசுவைப் பின்பற்றியிராமல் இருந்திருக்கலாம். ஆனால் இயேசுவின் ஞானமான வார்த்தைகள் அவளின் வாழ்க்கையை மாற்றி அமைத்தது. நீதி.25:11-ல் ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம். நீதி.15:23-ல் ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது என்று பார்க்கிறோம். பல வேளைகளில் நேரம், காலம் தெரியாமல் பேசி பிரச்சனையை ஏற்படுத்தி விடுகிறோம்.

தேவன் தேவ ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும், விசுவாச வார்த்தைகளையும், விடுதலையின் வார்த்தைகளையும், கிருபையின் வார்த்தைகளையும், உயிர்ப்பிக்கும் வார்த்தைகளையும், உண்மையுள்ள வார்த்தைகளையும், வல்லமையுள்ள வார்த்தைகளையும் நாவில் தருவது மாத்திரமல்ல. சமயத்திற்கேற்ப பேசக்கூடிய ஞானத்தைத் தருவாராக. எண். 12:11-ல் ஆரோன் மோசேயை நோக்கி, “நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள் மேல் சுமத்தாதிரும்” என்றான். அவனும், மிரியாமும் எத்தியோப்பிய ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாக பேசியிருந்தார்கள் (எண்.12:1).

சங்கீதக்காரனைப்போல “கர்த்தாவே என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக” சங்.19:14 என்று ஜெபிப்போமாக.



# உங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புகூருங்கள்

**Rev. பெகின் சாமுவேல்** (AGCM Director)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு வாழ்த்துக்கள் பல.

1982ம் ஆண்டில் ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்பர்னில் ஒரு குழந்தை இரு கைகளும், கால்களும் இல்லாமல் பிறந்தது. குழந்தையினுடைய பெற்றோர் அக்குழந்தைக்கு நிக் என்று பெயர் வைத்து அக்குழந்தையை கண்ணும், கருத்துமாக பராமரித்து வந்தனர். நாட்கள் பல சென்று வருடங்கள் ஆனது. அக்குழந்தை 10 வயது ஆனதும் தனக்கு தெரிந்த அறிவின்படி, தன்னால் எந்த பிரயோஜனமும் இல்லை என்பதை உணர்ந்து, தன்னையே மாய்த்துக் கொள்ள முடிவெடுத்தது. ஆண்டவருடைய அன்பினால் நிறையப்பட்ட அவனுடைய பெற்றோர், அந்த சிறுவனுக்கு தங்களுடைய அன்பை முழுவதுமாக மற்றக் குழந்தைகளைக் காட்டிலும் சற்று அதிகமாகவே செலுத்த ஆரம்பித்தனர். கிறிஸ்துவினுடைய அன்பையும், அவனை ஊக்குவிக்கும் சம்பவங்களையும், கிறிஸ்துவினுடைய படைப்பின் உயர்ந்த நோக்கத்தையும் எடுத்துக்கூறி, அவனை உற்சாகப்படுத்தினர். இதன் விளைவாக, இன்று உலகத்தையே தன்னுடைய ஊக்கமளிக்கும் உரையால் (motivational speech) கலக்கிக் கொண்டிருக்கிறார் போதகரான நிக்.

அன்பு ஒரு வலிமையான ஆயுதம். எந்த கரடுமுரடான இருதயத்தையும் செப்பனிட்டு திருத்தும் ஆற்றல் உடையது. இயேசு கிறிஸ்து செய்த எல்லாக் காரியத்திற்கும் மூலதனமாயிருந்தது அவருடைய அளவற்ற அன்பே. இன்று அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்து கொள்வதில்லை. பிள்ளைகளிடம் எதற்கெடுத்தாலும் கோபம், எரிச்சல். தங்களுக்கு சரியான அன்பு காட்டப்படவில்லை என்ற எண்ணம் தவறான வழிகளில், தங்கள் நண்பர்கள் மூலமாக அன்பை தேடிச் செல்லுகின்றனர். இன்று சாத்தான் மிகவும் நயவஞ்சகமாக இந்த அன்பு என்ற வலையை விரித்து பிள்ளைகளை வாரிச் சென்று விடுகிறான். எனவே பிள்ளைகளிடத்தில் அன்புள்ளவர்களாயிருங்கள் (தீத் 2.4).

பெற்றோர் காட்டும் அன்பு, ஒரு குழந்தை கருவாக வயிற்றில் இருக்கும்போதே தாக்கத்தை ஏற்படுத்துகிறது. 2010-ம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பின்படி, எந்த ஒரு குழந்தை தன் பெற்றோரின் அன்பிலும், பராமரிப்பிலும் வளர்க்கப்படுகிறதோ, அக்குழந்தை வளர்ந்தபின்பு மிக மகிழ்ச்சியாகவும், குறைவான மன அழுத்தத்துடன் உள்ளதாகவும் கண்டறிந்துள்ளனர்.

இதை வாசிக்கும் அருமையான பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை நீங்கள் நேசிக்கிறீர்கள் என்பது உண்மை. ஆனால் உங்கள் சொல்லாலும், செயலாலும் அதை உங்கள் பிள்ளைகள் உணர வைத்திருக்கிறீர்களா? தவறு செய்வதைக் கண்டிக்கும் போதும் கூட, மிகக் கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்தாமல், அன்புடன் தவறை சுட்டிக்காட்டி கண்டித்துப் பாருங்கள். வித்தியாசத்தைக் காண்பீர்கள்.

### 1. அன்பு கூருங்கள், அன்பு கூறப்படுவீர்கள்

அன்பு, வீட்டிலேயே தொடங்குகிறது என்று அன்னை தெரசா கூறுகிறார்.

நியூட்டனின் மூன்றாம் விதியைப் போல அன்பு காட்டுபவர்களுக்கு அன்பு நிச்சயமாக காட்டப்படுகிறது. அன்பாயிருக்கும் போது, பிள்ளைகளோடு நெருக்கமான பிணைப்புக்குள் வருவீர்கள். அவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக மாறி விடுவீர்கள். உங்கள் வீடுகளில் அன்பு நிறைந்திருக்க வேண்டுமானால் உங்கள் இருதயம் கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்திருக்கட்டும். உங்கள் பிள்ளைகளிடம் நான் உன்னை நேசிக்கிறேன் என்று தினமும் சொல்லுங்கள். அது உங்களுக்கும், பிள்ளைகளுக்கும் ஒரு சிறந்த உறவை உருவாக்கும். உங்களுக்கிடையில் மனதளவில் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணும். பிள்ளைகளை நேசித்துப் பாருங்கள். அவர்களால் நீங்கள் நேசிக்கப்படுவீர்கள்.

### 2. அன்பு கூருங்கள், ஆதாயப்படுத்துவீர்கள்

தேவன் கொடுத்த பிள்ளைகளை தேவனுக்காக வளர்க்கும் பொறுப்பு உன்னதமானது, தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டது. தவறிப்போன இளைய குமாரனை மறுபடியும் அன்பினால் ஆதாயப்படுத்திக் கொண்ட அந்த நல்ல தகப்பனைப் போன்ற இருதயத்தை தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். எத்தனையோ பிள்ளைகளை நாம் தினந்தோறும் பார்க்கிறோம். பாவப்பிடியில் சிக்கி, விடுவிக்க யாருமே இல்லாமல் இருக்கிற சிறுவர்களை, வாலிபர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும் ஆவல் உண்டெனில், உங்கள் அன்பை அவர்களிடம் செலுத்த தீர்மானியுங்கள். நாம் அவர்களை நேசித்தால்தான் அவர்களுக்காக ஜெபிக்க முடியும், அவர்களும் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்களே. அவர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயம் பண்ணுவீர்களா? அப்படியானால் அவர்களைத் தேடிச் சென்று, கிறிஸ்துவின் அன்பை உங்கள் மூலமாய், சொல்லில், செயலில் வெளிப்படுத்துங்கள்.

அன்புக்கு சிறந்த இலக்கணம் கொடுத்த இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள். உங்கள் வாழ்வில் இயேசு கிறிஸ்துவின் அன்பு வெளிப்பட உங்களை வாழ்த்துகிறேன். தேவ சமாதானம் உங்களோடிருப்பதாக. ஆமென்.

மிஷனரி பயணம் - இலங்கை





மிஷனரி கன்வென்ஷன் - கோவை வடக்கு





# 4 ANSWERS TO PRAYER

We must remember that answers to prayers will come in several ways from God:

### 1. There is a DIRECT answer.

Sometimes we pray for a specific request and it is answered at once, without any delay. It is very thrilling to see God respond instantly by granting our request that we had prayed about. All of us are full of joy when God answers our prayers in this way (James 1:5; 5:17; I Kings 18:36-38; Matthew 20:33, 34; Acts.9:40).

### 2. There is a DELAYED answer

God sometimes has the intention of granting our request, but delays the answer. God sometimes intentionally postpones answering our prayers to teach us patience and faith (James 1:4; Romans 4:21). God knows when it's the best time to grant the request that we have prayed about. We should not become discouraged if our request is not granted at once (Luke 18:1-8; Matthew 15: 21-28; Rev. 6:9-11). We must allow God to work within His own sovereign timetable. He does everything beautiful in His time (Ecclesiastes 3:11).

### 3. There is a DIFFERENT answer.

Because of unknown selfishness and short-sightedness, we are not always aware of what we really need. We may boldly ask for something; however, we might still unknowingly ask in a selfish manner. Therefore, God sometimes changes the way that He decides to answer the prayer that we offer up to Him. He has the right to do this as He did with the apostle Paul (2 Cor. 12:7-9). Paul prayed three times for relief but God changed the answer to his prayer by giving him grace instead of relief. God can give us a different answer to our prayers. William Culbertson said, "Keep praying, but be thankful that God's answers are wiser than your prayers!" The following words of an unknown author can put this in perspective.

I asked for strength but God gave me difficulties to make me strong.
I asked for wisdom but God gave me problems to solve.
I asked for prosperity but God gave me brawn and brain to work.
I asked for courage but God gave me dangers to overcome.
I asked for patience but God placed me in situations where I was forced to wait.
I asked for love but God gave me troubled people to help.
I asked for favours but God gave me opportunities.
I received nothing I had asked for but everything I hoped for.
My prayer has been answered.

### 4. There is a DENIED answer.

Nobody likes to recognize denial as an answer to prayer. God may decide to deny our request simply because it did not align with His will or purpose for our lives.

Sometimes we may think that God does not answer our prayers when we pray to Him because He does not give us what we ask for. The fact of the matter is this, God did answer your prayer, you just missed the answer! God said, “No.” When God says “No” this is an answer to prayer (1 Kings 19:4). Elijah prayed that he would die, but his foolish request was denied. Other examples-Moses' request (Deut. 3:23-26), Zebedee's wife's request (Matthew 20:21-23), Delivered man's request (Mark 5:18-20).

Jesus prayed, "May this cup be taken from me." He also prayed, "Your will be done." It was the Father's will that Jesus drink the cup of suffering for the sins of the world. Matthew 26:36-46. We must always be willing to accept God's will. Someone once said: “I have lived to thank God that all my prayers have not been answered.” God knows what he is doing! "'For I know the plans I have for you,' declares the Lord, 'plans to prosper you and not to harm you, plans to give you hope and a future'" (Jer. 29:11).

***- Editor***

## போட்டி எண் : 72 (சரியான விடைகள்)

(1) மொர்தெகாய்; (2).சிரேஷ்; (3).அத்சாள்; (4).ஆதார்; (5).பிக்தானும், தேரேசும்; (6).வஸ்தி; (7).பூர்; (8).ஆமான் மொர்தெகாய்க்கு ஆயத்தம்பண்ணின தூக்குமரத்தில் ஆமானையே தூக்கிப்போட்டார்கள்; (9).சீவான்; (10).பூரீம்; (11).முட்டையின் வெள்ளைக்கருவில்; (12).சோப்பார்; (13).பாதாளத்தில் இறங்குகிறவன்; (14).யோபு; துன்மார்க்கர்; (16).கோபம்; (17).யோபு; (18). தீவினையை ; (19). சூகியனான பில்தாத்; (20).யோபு.

## போட்டி எண் : 72 (சரியான விடை எழுதியவர்கள்)...

**செங்கோட்டை** : குளோரி; சித்ராபிளஸ்சி; டோரா; மாது; சுபா; தங்கமணி; விஜி; புஷ்பவள்ளி; K.மஞ்சு; G.முத்துலெட்சுமி; கிரிஜா; சுமதி; A.மஞ்சு; E.புனிதா; மரகதம்; கந்தையா; T.கலா; பியூலா; T.ஜெபா; S.முத்துலெட்சுமி; கோகிலா; மகேஸ்வரி; மாரிமுத்து தாவீது; ராதாமணி; தங்கமீனாட்சி அமுதா;| **ஸ்ரீவில்லிபுத்தூர்** : ஜெயராணி; ஜேஸ்மின் ரூபி; பாஞ்சாலி; அனிதா; விக்டர் பிரேம்; அபிகாயில்; ஜாஸ்பர் ஏஞ்சல்; நாச்சியார்; அபிராமி; காபிரியேல்; சுகந்திகலா; நித்யா; தேவபிரியா; ரேச்சல் இவாஞ்சலின்; ஷேரன்; மகதலேனா மரியாள்; கிரேஸி; கிறிஸ்டி பிரியா; ஞானசெல்வி; மெசி; | **ஆலங்குளம்** : ரெஜினாசாரு; புஷ்பா; உமாரோஸ்லின்; பிளாரன்ஸ்; ரோஸ்லின்; பெர்சியாள்; ஜெயபாரதி; லதா; | **மதுராந்தகம்** : சுனிதா ரோஸ்லின்; சுனிதா ஸ்ரீ; சாந்தி; கிரேஸ் பியூலா; ரபிதா; மேகலா; கிரிஜா; ஜோஸ்பின் | **கூவத்தூர்** : கோபிநாத்; எட்வர்ட்; சாமுவேல்; பாக்கியவதி; மீகாள்; பிரீத்தி; பிரிஸ்கில்லா; விஜயா; கௌரி; | **கடையநல்லூர்** : P.ஸ்டெல்லா; ஜெபசீதாலட்சுமி; செல்வி இந்திராணி; ஆஷாதேவி; மேரிகுட்டி; G.ஸ்டெல்லா; தங்கராஜ்; | **வடக்கு ஆத்தூர்** : குளோரி; தங்கம்; தேவராஜ்; மகேஸ்வரி; ரெமில்டா; டேவிஷா; பியூலா; சைமன்ராஜ் | **புளியங்குடி** : ஞானமணி; தினேஷ்; அமிர்த சுவிட்டி; ஜெயமணி; T.அமிர்தசுவிட்டி; | **திருநின்றவூர்** : எழிலரசி; மார்த்தாள்; ஜஸ்டின் பீட்டர்; கேத்ரின்;| **கிச்சிப்பாளையம்** : ராணி; ஷாரோன் ஜெயரூபி; ஜெரின் ஜெயசீலி; கிறிஸ்டி ஜான்; | **இடைப்பாடி** : ஜெயமேரி; அஞ்சலி; ரூத்; சந்திரா;| **ஆறுமுகநேரி** : பிரேமா; எஸ்தர் வெண்ணிலா; கஸ்தூரி; பானுமதி; | **கொட்டாகுளம்** : ஏஞ்சல்ராணி; ஜெபமேரி; ரக்ஷனா; ரெஜினா; ஜான்சிராணி;|

## போட்டி எண் : 72 (சரியான விடை எழுதியவர்கள்)...

**மடத்துக்குளம்** : ஜெனிட்டா ஜுலியட் மேரி; கிரேஷ் மேரி; ஜாய்ஸ் மேரி; ஜீன் மெரிலின் கிருபா; | **சிட்லபாக்கம்** : தமிழ்செல்வி; ஜோதி; ரெபேக்காள்; தாமரைச்செல்வி; | **நாசரேத்**:பரிபூரணம்; மெர்சி; இவாஞ்சலின்; மேரி; தாசன்மோசஸ்; | **பரமத்திவேலூர்** : கௌசிகா; பாமா; கார்த்தி சாமுவேல்; திருச்செல்வி; | **தூத்துக்குடி**: ஸ்டார்லினா; சகாயமேரி; பியூலா; **நெய்வேலி** : K.மைதிலி; தெபொராள்; | **கம்பம்** :வடிவுக்கரசி; ஜுலி; ஜென்ஸி; | **கிருஷ்ணகிரி** : பிரசன்னகுமார்; ரேச்சல் ராஜன்; தெபொரா ஆனிமெர்சி; | **வந்தவாசி** : விஜயா;நித்யா; அபிஷா சுமதி; ஜுலியட்; | **முத்தையாபுரம்** : காபிரியேல் அந்தோணி; ஜீவிதா; மங்களம்; | **காமராஜபுரம் (செ)** :சிந்து; ரவித்தா; மரகதலீலா; | **தேனி** : திரவியச்செல்வி; கிருபா; மீனா; பூங்கோதை ; | **அந்தமான்** : விஜய்; ஜேக்லின்; | **அச்சிறுபாக்கம்** : செல்வகுமாரி; சித்ரா; | **ஆண்டிபட்டி** : மேரி; தேவபாக்கியம்; | **காளையார்கோவில்** : சத்யா; அருளானந்தம்; | **T.N.பாளையம்** : சௌந்திரி: சுஜா; | **வில்லியனூர்** : செல்லப்பன்; ஷீபா;| **வடக்குகோணம்** : ரபேல் ஜோசப்; மரியநேசம் ; | **அரும்பாக்கம்**: மேரி; ஜெனிட்டா தங்கராணி;| **திருத்துறைப்பூண்டி** : சண்முகம்; ஆர்த்தி; | **பாளையங்கோட்டை** : சாந்தகுமார் : மெரில் ஆலிஸ்; தமிழ்செல்வி தெரசா; | **பள்ளிக்கரணை** : கீதா மகேஸ்வரி: ஜோதி; | **திசையன்விளை** : ஜெயசீலி; ராணி; | **காரைக்கால்** : ராஜாமணி; உமா; | **மூலக்கரைப்பட்டி** :மல்லிகா; ரூபன் செல்லத்துரை ;| **வத்ராப்** : ஜெபராணி; கிறிஸ்டி; | **சென்னை**: சாந்தி; மெர்லின் ஹெலன் பிரித்தியா; மலர்விழி; | **மதுரை** : மேரி; விஜிலா; **வத்ராப்**: அருள்செல்வி; | **தவிட்டுசந்தை** : ஜேஸ்மின்; | **புத்தூர்** : ராஜேஸ்வரி; | **ஓசூர்** : செல்வமணி ஸ்டெல்லா; ஐடா; | **கோவில்பட்டி** : அகிலா ஜாய்; | **சாத்தூர்** : லாவண்யா; | **மரக்காணம்** : பிரான்சினாள்; | **தர்மபுரி** : ரூத்; | **திருமங்கலம்** : இம்மானுவேல்; | **பேரையூர்** : வேலம்மாள்;| **காமராசர்நகர்**: புளோரியா; | **கும்மிடிபூண்டி** : குளோரியா; | **K.T.C நகர்** : பிரேமா ரூத் : | **ஆலங்காயம்** :சாம் கமலேசன்; | **தென்காசி** : எஸ்தர் ; | **களக்காடு** : வசந்தா; | **தென்னூர்** : கிறிஸ்டி மகாலஷ்மி; | **ஆழ்வார்குறிச்சி** : தெபொராள்; | **உத்தமபாளையம்** : மேரிமரகதம்; | **கள்ளபுரம்** : விக்டர் மகேஷ்; | **பழையகாயல்** : எலிசபெத்; | **ஆசாரிபள்ளம்** : ஏஞ்சல்குமார்; | **விருத்தாசலம்** : சுகிர்தா; | **அம்பாசமுத்திரம்**: லீலா; | **திருமயம்** : பபிதா புஷ்பராஜ்; | **கடாட்சபுரம்** : ரேவதி; | **பேயன்விளை** : ஜாய்ஸ் மேரி; | **சாயர்புரம்**: தேன்மொழி; | **வளையபட்டி** : ஜாயல்பெர்சிஸ்; | **கள்ளிக்குடி** : ஜாய்;| **மம்சாபுரம்** : யோகராணி; | **பெரும்பாக்கம்** : தாமஸ் பியூலா; | **திண்டிவனம்** : சாராள் அறிவுச்செல்வி; | **மாக்கினாம்பட்டி**: டெய்ஸி; |**களிஞ்சூர்** : கிருபாகரன்; | **ஆண்டாள்புரம்** : கனகவல்லி; | **திருசெந்தூர்** : பியூலா; | **திருச்சி** : மேரிசுஜாதா; | **புதுச்சேரி** : குப்பம்மாள்; | **திருநெல்வேலி** :ஜெருஸா; | **ஏர்வாடி** : மரகதம்; | **கோவைபுதூர்** : சலோமி; | **ஆம்பூர்** : ரூபி; | **ஈரோடு** : சந்தரகுமாரி; | **புதுக்கோட்டை** : லலிதா; | **திருமுல்லைவாயல்** : ஜெனிபர்; | **பழனி** : வளர்மதி ; பிரீத்தி; | **வெள்ளோடு** : விசுவாசமேரி; | **சின்னாளபட்டி** : சலோமி; | **கொங்கந்தான் பாறை** : சந்திரா; | **கல்லகம்** : அமுதா; | **தஞ்சாவூர்** : விஜி;| **மலுமிச்சம்பட்டி** : பிரிஸ்கில்லா; | **காட்பாடி** : பால்பிச்சமுத்து; | **கவுந்தப்பாடி** : பிரியா; | **காங்கேயம்** : பால் விக்னேஷ்; | **பொள்ளாச்சி** : ஸ்டெமி ஜெஸிந்தா; | **கோயம்புத்தூர்** : கிறிஸ்டினா அபிகாயில்; | **இடையர்பாளையம்** : மேரி டென்சில்; | **நீலகிரி** : கல்யாணி; | **பல்லடம்** : ஆரோன்; | **திருவள்ளூர்** : ஜெபகுமாரி ஆனி;

# பரிபூரண ஜீவன் போட்டி எண் – 73

யோபு (11-42 அதிகாரங்கள்) இருப்பிடத்துடன் விடை எழுதவும்.

1. எனக்குச் சாட்சி பகருகிறவர் __________ இருக்கிறார்.
2. எலும்புகளில்__________ புஷ்டியாயிருக்கிறது.
3. தண்ணீர் __________ குடையும்
4. தேவன் தந்த ஆவி என் __________ இருக்கும்.
5 __________ எங்கேயோ அங்கு __________ சேரும்.
6. இரும்பை __________ வெண்கலத்தை __________ எண்ணும்.
7. __________ பார்த்து நீங்கள் எனக்கு __________ எனக்கு __________ என்கிறேன்.
8. நீ மிருகங்களைக் கேட்டுப்பார். அவைகள் உனக்குப் __________
9. தங்கள் எண்ணத்தில் __________ எவர்களையும் அவர் மதிக்கமாட்டார்.
10. __________ ஞானத்தில் விலை உயர்ந்தது.
11. கர்த்தர் யோபின் __________ பார்க்கிலும் அவன் __________ ஆசீர்வதித்தார்.
12. __________ தாமே உமக்கு பசும்பொன்னும், உமக்குச் சொக்க வெள்ளியுமாயிருப்பார்.
13. உங்கள்__________ சேற்றுக் குவியல்களுக்குச் சமானம்.
14. துன்மார்க்கனுடைய __________ அணைந்துபோம்.
15. வாய்ச் சாலகன் __________ விளங்குவானோ?
16. மாயக்காரனின் __________ ஒரு நிமிஷம் மாத்திரம் நிற்கும்.
17. __________ வாங்கினவர்களின் கூடாரங்களை __________ பட்சிக்கும்.
18. மனுஷன் __________ திரும்புவான்.
19. பெரியோரெல்லாம் __________ முதியோரெல்லாம் __________ அறிந்தவர்களுமல்ல.
20. பாதாளமானது __________ பட்சிக்கும்.
21. சர்வ வல்லவருடைய __________ எனக்கு உயிர்கொடுத்தது.
22. நான் __________ சகோதரனும் __________ தோழனுமானேன்.
23. __________ தூண்டிலினால் பிடிக்கக்கூடுமோ.
24. என் __________ என்னை மறந்துவிட்டார்கள்.
25. என் __________ எனக்குச் சால்வையும், பாகையுமாய் இருந்தது.

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.10.2018

சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும்.



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**"பரிபூரண ஜீவன்"**
**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**
A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809
செல்: 88077 18002

# மிஷனரி இரவு சிறப்பு நிகழ்ச்சிகள்
























Registered News Paper Regd. No. 8206 / 62

## தமிழ் பிரதேச நிர்வாகக்குழு தலைவர்கள்




தமிழ் பிரதேச 70வது வருடாந்திர மாநாடு















BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165